DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Realty Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999


25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

$1.00


Tel : 416-752-1524
Fax: 416-752-6703



Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX COMMUNITY

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal; Affidavits for immigration purposes
Kokulan Baskaran
Tel : 647-344-6600

Ontario approved Pawn Brokers Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099



உதயம் 1266 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 10, 2020


## உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 12,394,197 ஆக உயர்ந்தது...


## உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 558,081 ஆக அதிகரித்துள்ளது...

## இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லையாம்...

## அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு 135,875 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த பல மாதங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை 9ம் திகதி மாலை வரை பலிகொண்ட மக்களின் எண்ணிக்கை நாடுகள் வாரியாக தரப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| அமெரிக்கா: 135,875 | இத்தாலி: 34932 | கனடா: 8756 | இங்கிலாந்து: 44,704 | ஸ்பெயின்: 28,641 |
| ஜேர்மனி: 9,192 | சீனா: 4659 | பிரான்ஸ்: 29,992 | ஈரான்: 12,391 | இந்தியா: 21721 |
| இலங்கை: 11 | பெல்ஜியம்: 9782 | பிரேசில்: 69,321 | ரஸ்யா:- 10942 | |





## நவாலி சென் பீற்றர் தேவாலயத்தில் தடைகளை மீறி சிவாஜிலிங்கம் தலைமையில் நேற்று அஞ்சலி!

யாழ்ப்பாணம், நவாலி சென் பீற்றர் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவு தூபியில் அஞ்சலி செலுத்த பொலிசார் தடைகளை ஏற்படுத்திய போதிலும் அதனையும் மீறி மக்கள் நேற்று வியாழக்கிழமையன்று அஞ்சலி செலுத்தினர்.

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் கடந்த 1995ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09ஆம் திகதி விமான படையினர் வீசிய குண்டு வீச்சில் இடம்பெயர்ந்து தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த குழந்தைகள் பெண்கள் உள்ளிட்ட 147க்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அன்றைய தினம் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக தேவாலயத்திற்கு அருகில் நினைவு தூபி அமைக்கப்பட்டுள்ளது.


*(தொடர்ச்சி பின் பக்கம்)*



MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000 Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY RENOVATION
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO **75%** REFINANCE

## MONTHLY SAVING

**$2,409**

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.64% | | $1,553.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,553.00 |



**mortgageSolutions.ca**

Kiruba Thanabalasingham
Mortgage Agent Lic#M12002440

Cell: 416.894.9122
Fax: 647.317.1511

info@mortgageSolutions.ca
Ultimate Mortgage Group. Lic#11995

## Prime + 1% Lower Rate

**$50,000** EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

**416.894.9122**

**$375 Mo.**

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam

OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,



4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.uthayannews.ca


உதயன் கதிரோட்டம்

# ‘தமிழ் மக்கள் பேரவை’யின் வார்த்தைகளை ‘தலை மேற் கொண்டு’ பொதுத்தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டும்

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் களத்தில் நின்றவண்ணம் ,வாக்குகளைப் பெறும் நோக்கில் “போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாண்டில் நடைபெறும் இந்த தேர்தலை நாம் உற்று நோக்கும் போதும் முன்னெப்போதும் இல்லாத வகையில் கட்சிகளின் எண்ணிக்கையும் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையும் வியக்கும் வகையில் அதிகரித்தள்ளதை நாம் கவனிக்கலாம்.

பொதுச் சந்தை ஒன்றில் போய் அமர்ந்திருந்து காய்கறி வியாபாரமும் மீன் வியாபாராமும் செய்வது போன்று இந்த தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள் கணிக்கின்றார்களா என்றால் அது சரியான பதில் இல்லை.

தேர்தலில் போட்டியிடுவதும்,அதில் வெற்றியடையவதும் சந்தை வியாபாரத்திற்கு ஒப்பிட முடியாது. பாராளுமன்றப் பதவி என்பது தற்போது பல கோடி ரூபாய்களை முன்னாள் வைத்துக் கொண்டு “பேரம்“ பேசப்படுகின்ற ஒரு “வர்த்தகம்“ என்பதை நாம் உணர்ந்து கொண்டோமோ இல்லையோ முன்னாள் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மலையகத்தின் உறுப்பினர்களும் நன்கு படித்து“ வைத்துள்ளார்கள் என்பதே உண்மை. அதன் ‘பெருமை’களை தங்கள் சகாக்களுக்கும் கற்பித்து, தங்கள் அணிகளில் சேர்த்துக் கொண்டுள்ளார்கள்

இந்தத் தேர்தல் மூலம் இலங்கை என்ற மாங்கனித்தீவிற்கு என்ன கிடைக்கப் போகின்றது என்றால் பாரிய பொருளாதாரப் பற்றாக்குறையை வரவு செலவுத் திட்டம் காட்சிப் படுத்தப்போகின்றது.

முதலாளித்துவ அரசியல்வாதிகளின் நோக்கமாக விளங்கும் சுரண்டல் மற்றும் ஊழல் போன்றவை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றக் கூடிய வாய்ப்புக்கள் அதிகளவில் அவர்களுக்கு கிட்டும்.

மேலும், இரண்டு பிரதானக் கட்சிகளிலும் ஆட்சியில் உள்ளவர்களால் அரச நிறுவனங்களிலும் மத்திய வங்கியிலும் மோசடிகள் செய்து பழக்கமும் அனுபவமும் உள்ளதால் அது அவர்களுக்கு நன்மை தரும் விடயமாக இருக்கும். அதைத் தொடர வாய்ப்பு ஏற்படும்.

மலையக மக்களுக்கு குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்க விமோசனமே இல்லை. தொழிலாளர்களின் இரத்தத்தை குறி வைத்து அட்டை உறிஞ்சவும் தலைவர்களும் அரசியல்வாதிகளும் அவர்களிற்கு வழங்கப்படும் அனைத்தையும் சுரண்டவும் மீண்டும் சந்தர்ப்பம் கிட்டப் போகின்றது.

குறிப்பாக கடந்த அரசில் இந்திய அரசாங்கம் வழங்கிய வீட்டுத் திட்டத்தில் ஒரு வீட்டுக்கு ஒதுக்கபட்ட 8 இலட்சத்தில் தனது பங்காக நான்கு இலட்சத்தை ஒப்பந்தக் காரரிடம் கேட்டுப் பெற்றுக்கொண்ட திகாம்பரம் என்னும் அமைச்சரின் “ஆலோசனையில்“ நான்கு இலட்சத்திற்கும் குறைவான செலவில் வீடு கட்டிக் கொடுக்க , அவை உறுதியற்றவையாகவும் தொழிலாளர்கள் வசிப்பதற்கு உகந்தவையாக இல்லாமற்போக, அந்த திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது போல மீண்டும் அமைச்சர்களாகி கோடிக் கணக்கில் சுரண்டும் கனவில் அவரைப் போன்று அடுத்த கட்சிக் காரர்கள் காத்திருப்பார்கள்

அடுத்து நாம் குறிப்பிடுவது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களையே.

அவர்கள் இடப்போகின்ற புள்ளடிகள் அவர்களுக்கு எண்ணற்ற வலிகளையும் இழப்புக்களையும் சோதனைகளையுமே தரப்போகின்றன என்று நிதர்சனமாகவே தெரிகின்றது.

குறிப்பாக கடந்த காலங்களில் தொடர்ச்சியாக பதவிகளில் அமர்ந்திருந்து பல சலுகைகளையும் அனுபவித்தவர்கள் மீண்டும் அதே கனவுகளோடு, மக்களைக் கவரக்கூடிய ஆயிரம் பொய்களை கூறி அழுது வடித்து வாக்குகள் பெற்று மீண்டும் விமானங்கள்போன்ற வாகனங்களில் பறக்கவே காத்திருக்கின்றார்கள். அவர்கள் அனைவரிடத்திலும் நிதி நிறைந்து காணப்படுவதால், மக்கள் ஏமாற்றப்படலாம்.

சரி, புதிதாகப் போட்டியிடுகின்ற நூற்றுக்கணக்கானவர்கள் பல கட்சிகளின் சார்பில் இந்த தேர்தலில் குதித்துள்ளார்கள். அவர்களில் பலருக்கு நல்ல நோக்கங்கள் இருந்தாலும் மக்கள் துயரங்களை தீர்த்து வைக்கும் தயாள குணம் தேங்கிக் கிடந்தாலும் கூட்டமைப்பு போன்ற நிதி பலமிக்க அணிகளோடு மோதுவதும் மக்களை ஈர்ப்பதும் மிகுந்த சிரமமான விடயமாகவே அவர்களது பிரச்சாரங்கள் தென்படலாம்.

ஆனால் வடக்கு கிழக்கு மக்கள் நன்கு சிந்தித்து நிதானமாக வாக்களிக்க வேண்டிய அவர்களது கடமையாகும்.

அதை விடுத்து, அல்லது அந்த உண்மையை மறந்து பொருத்தமானவர்களை தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டு, வாக்களிக்காமல் இருந்துவிட்டு பின் தெரிவுசெய்யப்படும் அரசியல் பிரதிநிதிகளை விமர்சிப்பதும் ஒரு பொறுப்பற்ற செயற்பாடாகவே கருத வேண்டியிருக்கின்றது. இந்த விடயத்தில் மக்கள் நலன் விரும்பும் கடசிகளும் வேட்பாளர்களும் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் வடக்கில் மிகுந்த உரமான சிந்தனைகளோடு ஸ்தாபிக்கப்பெற்ற தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள அறிக்கையில்உள்ள சில பகுதிகளை எமது வாசகர்கள் முன்னால் படிப்பதற்காக வைக்கின்றோம்.

”எதிர்வரும் இலங்கைப் பொதுத் தேர்தலில், தனிமனித ஒழுக்கம், நேர்மை, லஞ்சத்துக்கும் சலுகைகளுக்கும் விலைபோகாத தைரியம், தமிழ் மக்களின் அடிப்படை நிலைப்பாடுகளை தெளிவாக வலியுறுத்துவதோடு அதை முன்னின்று செய்யும் தற்றுணிவு கொண்ட, தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை அடைவதற்காக கொள்கைப்பற்றுடன் செயற்படக் கூடிய அரசியல் பிரதிநிதிகளையே இம்முறை தமிழ் மக்கள் தெரிவு செய்ய வேண்டுமென தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள் விடுக்கின்றது.


## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

## கார் விற்பனைக்கு (CAR FOR SALE)

2008 Nissan Versa
Hatch Back Car for Sale.

Red Colour, Automatic
Gasoline, FWD, 300,000 km
With 4 Extra Seasonal Tires.

Asking Price: $ 1,400.00

Ilango:
(416) 822-2179

## BASEMENT FOR RENT

Morningview Trail / Old Finch சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில்
2 bedrooms basement with
2 washrooms & separate entrance
வாடகைக்கு உண்டு.
Laundry வசதியும் உண்டு,
Close to TTC, school, Daycare, & park.
சிறிய குடும்பம் அல்லது தம்பதிகள் விரும்பத்தக்கது.

Call: (416) 473-4200

## முடி வெட்டுனர் தேவை (HAIR CUTTERS)

ஸ்காபுறோவில் அமைந்துள்ள பிரபல சலூன் ஒன்றுக்கு உடனடியாக ஆண், பெண் மடிவெட்டுனாகள் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

Call: (647) 470-4615

## வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு உடனடியாக வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் அமைக்கலாம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

Call: (416) 299-6742

## HAIR SALON FOR SALE

Brimley / Eglinton

Sale: - Equipment
- Tools
- Supplies
- Client List

21+Years in business.
650+ Regular Clients, Plus Walk-Ins

Call: (416) 768-8673
Email:
Kumari_Madu@hotmail.com

உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!

- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca

MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1

ARI A. ARIARAN CPA, CGA
Chartered Profressional Accountant

# இலங்கைத் தேர்தல்: யாழ்ப்பாணம் கள நிலவரம் - 2

- சிவா பரமேஸ்வரன்



யாழ்ப்பாணமும் தமிழுணர்வும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். வறண்ட பூமியானாலும் கல்வி வளம் நிறைந்த பூமி. தமிழர்களின் தாயகப் போராட்ட வரலாற்றில் மிகமுக்கியமான பங்குள்ள இடம். இலங்கை எனும் நாட்டின் வளர்ச்சியைக் கல்வி மற்றும் நிர்வாக ரீதியில் கட்டியெழுப்பிய பலரும் இங்கு பிறந்தவர்களே.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அறவழியில் முன்னெடுத்த தந்தை செல்வாவும் அந்த இலட்சியத்துக்காக ஆயுதப் போராட்டத்தை வழிநடத்திய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் யாழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்கள்.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் பல குழுக்கள் தோன்றியதும் இங்குதான். தமிழர்களுக்கான தீர்வு தனி நாடே எனும் வட்டுக்கோட்டை தீர்மானம் பிரகடனப்படுத்தப்பட்டதும் இங்குதான்.

போர்க்காலம் யாழ்ப்பாணத்தில் பல வி'யங்களைப் புரட்டிப் போட்டது. கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள், உட்பட பல்வேறு தரப்பினர் புலம் பெயர்ந்து பல நாடுகளின் யாழ்ப்பாண அடையாளத்தை இழக்காமல் இன்றும் வாழ்கிறார்கள்.

போர் காரணமாக உள்நாட்டில் மாறுதல்கள் ஏற்பட்டன. அது யாழ்ப்பாண அரசியலும் எதிரொலித்தது.

அங்கிருந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்வாகி தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவர்களின் எண்ணிக்கை காலவோட்டத்தில் "கழுதை தேய்ந்து கட்டெறும்பான" கதையாயிற்று. 1977ல் தொகுதிவாரியாக இறுதித் தேர்தல் நடைபெற்றபோது 11 உறுப்பினர்கள் தெரிவாயினர். அனைவரும் தவிகூ சேர்ந்தவர்கள். விகிதாசார முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு பதினொன்று பத்தாகி, பத்து ஒன்பதாகி இப்போது ஏழாகவுள்ளது.

## 1989 தேர்தல்:

விகிதாசார முறையில் நடைபெற்ற முதலாவது தேர்தல். அவ்வேளை இந்தியப் படை வடக்கு கிழக்கில் நிலை கொண்டிருந்தது. தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை11.

தவிகூ உதயசூரியன் சின்னத்தில் டெலோ, ஈபிஆர்எல்எப் ஆகிய கட்சிகள் இணைந்து போட்டியிட்டன. புளொட், தமிழ் காங்கிரஸ், ஐதேக, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையும் போட்டியிட்டன. ஈரோஸ் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டது. இந்தத் தேர்தல்தான் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் அமைப்புகளின் தேர்தல் அரசியல் பிரவேசமாக அமைந்தது.




ஈரோஸ் சார்பாக அந்த அமைப்பைச் சேர்ந்த இ.ரட்ணசபாபதி, இ.பரராஜசிங்கம் உட்பட 8 பேர் தெரிவாயினர். தவிகூ சார்பில் தெரிவான மூவரும் ஈபிஆர்எல்எப். அதில் ஒருவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். முதல் முறையாகத் தேர்தல் களத்தில் இறங்கிய மாவை சேனாதிராஜா தோல்வியடைந்தார்.

ஈரோஸுக்கு யாழ் மாவட்டத்தில் கிடைத்த வாக்குகள் மூலம் தேசியப் பட்டியலிலும் ஒரு இடம் கிடைத்தது. மட்டக்களப்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த சேகு தாவூத் பஷீருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டது.

விகிதாசாரத் தேர்தல் வரலாற்றில் சுயேச்சைக் குழுவுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்தது இதுவே முதலும் கடைசியும்.

தேர்தல் முடிந்த மூன்று மாதங்களுக்குள் பதவிப் பிரமாணம் செய்யாத நிலையில் ஈரோஸ் உறுப்பினர்கள் பதவியிழந்தார்கள். மீண்டும் பதவியிழந்த சிலர் உட்பட 9 பேர் பதவியேற்றனர். அதில் மலையகத்தைச் சேர்ந்த இராமலிங்கமும் ஒருவர்.

பிரேமதாஸவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டிருந்த போர் நிறுத்தம் 1990ல் முறிவடைந்தது. பிறகு அரசியல் நெருக்கடி காரணமாக ஈரோஸ் உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்லாமல் பதவியிழந்தனர். பின்னர் ஈரோஸ் கலைக்கப்பட்டு பாலகுமார் உட்பட பலர் விடுதலைப் புலிகளில் இணைந்தனர். 1994 தேர்தல்வரை அந்த இடங்கள் வெற்றிடமாகவே இருந்தன. ஆனால் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியை இழந்த சேகு தாவூத் பஷீர், சில மாதங்களுக்குப் பிறகு மட்டக்களப்பிலிருந்து தெரிவானவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பதவியிழக்க, தனக்குரிய இடம் வரும் போது பதவியேற்றுக் கொண்டார்.



பின்னர் பல்டியடித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்தார்.

## 1994 தேர்தல்:

வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டாலும் நாடு தழுவிய விகிதாசாரத்தில் பதினோரு ஆசனங்கள் 10ஆகக் குறைந்தது.

மாவட்டத்தின் பெரும்பாலான பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலம் அது. தீவகம் மட்டும் அரச கட்டுப்பாட்டில் இருந்தது. விடுதலைப் புலிகள் தேர்தலை நடத்தக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்திருந்தால், வாக்களிப்பு வீதமும் முடிவும் மாறியிருக்கும்.

இந்தத் தேர்தலில் 2.3% வாக்குகளே பதிவாகி அதன் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியது. ஈபிடிபி போட்டியிட்ட முதலாவது தேர்தல் இதுவாகும். தவிகூ போட்டியிடக் கூடிய சூழல் இருக்கவில்லை. சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்ட ஈபிடிபி பெற்ற வாக்குகள் வெறும் 10,704 ஆனால் கிடைத்த ஆசனங்களோ 9. அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா முதல் முறையாக நாடாளுமன்றத்தில் பிரவேசிக்கின்றார். அன்று முதல் இன்றுவரை தனது பதவியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.



### தொகுதிவாரி முடிவுகள்

| தொகுதி | பதிவான வாக்காளர்கள் | ஈபிடிபி | மு கா | சுயேச்சை | ஈபிஆர்எல்எப் |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்துறை | 49504 | 9944 | 56 | 214 | 232 |
| வட்டுக்கோட்டை | 58949 | 556 | 05 | 43 | 08 |
| காங்கேசன்துறை | 60417 | 93 | 04 | 15 | 09 |
| மானிப்பாய் | 58382 | 04 | 00 | 08 | 00 |
| கோப்பாய் | 56496 | 40 | 00 | 17 | 00 |
| உடுப்பிட்டி | 52153 | 05 | 01 | 01 | 01 |
| பருத்தித்துறை | 40336 | 03 | 00 | 31 | 00 |
| சாவகச்சேரி | 51717 | 13 | 62 | 02 | 02 |
| நல்லூர் | 62372 | 08 | 00 | 09 | 02 |
| யாழ்ப்பாணம் | 50045 | 76 | 1914 | 26 | 06 |
| கிளிநொச்சி | 55995 | 02 | 56 | 06 | 02 |
| தபால் வாக்கு | 09 | 00 | 00 | 02 | 01 |
| மொத்தம் | 596366 | 10744 | 2098 | 374 | 263 |

இந்தத் தேர்தல் முடிவுகள் கேலிக்கூத்தான ஒன்றென இன்றுவரை பேசப்படுகிறது. ஈபிடிபியினர் தீவகத்தில் அரசியல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன. ஆனால் ஆட்சியில் இருந்த ஐதேக யாழ்ப்பாணத்தில் போட்டியிடவில்லை.

தொகுதிவாரியாக நூற்றுக்கும் குறைவான வாக்குகளைப் பெற்று உறுப்பினர்கள் நாடாளுமன்றம் சென்றதும் இத்தேர்தலில் நடந்தது.

யாழ் மாவட்டத்திலிருந்து முதல் முறையாக முஸ்லிம் ஒருவரும் நாடாளுமன்றம் சென்றார். புத்தளத்தைச் சேர்ந்த சேர்ந்த ஐ. எம். இலியாஸ் தேர்வானார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தங்கியிருந்த இடங்களிலேயே வாக்களிக்கும் வசதி வழங்கப்பட்டதால் மு காவுக்கு கிடைத்த வாக்குகள் மூலம் அவர் தேர்வானார்.

## 2000ஆம் ஆண்டு தேர்தல்:

ஒப்பீட்டளவில் யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடைமுறையில் இருந்ததால் வாக்காளர்களின் எண்ணிக்கை கூடியது. தென்னிலங்கையைச் சேர்ந்த சிறிய கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும்கூட போட்டியிடும் நிலை ஏற்பட்டது.

வாக்காளர்களின் எண்ணிக்கை 6,25,000ஐ கடந்தது. ஆனால் 21% மக்களே வாக்களித்தனர். வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும், நாடு தழுவிய விகிதாசாரத்தில் பத்தாக இருந்த ஆசனம் ஒன்பதானது.

அரசியல் கட்சியாகப் போட்டியிட்ட ஈபிடிபியின் எண்ணிக்கை ஒன்பதிலிருந்து நான்காகக் குறைந்தது. தவிகூ 3 ஆசனங்களைப் பெற்றது. ஐதேக சார்பில் தி. மகேஸ்வரன் தெரிவானார். சுதந்திரத்துக்கு பிறகு 1952 தேர்தலில் ஊர்காவற்துறை தொகுதியிலிருந்து அல்பிரட் தம்பையா ஐதேக சார்பில் தெரிவாகியிருந்தார். 42 வருடங்கள் பின்பு, தேசியக் கட்சி ஒன்றிலிருந்து ஒருவர் (மகேஸ்வரன்) தெரிவானார். முஸ்லிம் காங்கிரஸ் இழந்த ஒரு ஆசனத்தை தமிழ் காங்கிரஸ் கைப்பற்றி அப்பாத்துரை விநாயகமூர்த்தி நாடாளுமன்றம் சென்றார்.

## 2001 தேர்தல்:

தமிழ் காங்கிரஸ், தவிகூ, ஈபிஆர்எல்எப், டெலோ ஆகிய கட்சிகள் புரிந்துணர்வு அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக "உதயசூரியன் சின்னத்தில்" சந்தித்த முதலாவதும் இறுதித் தேர்தலும் இதுவே. ஆனந்தசங்கரி உட்பட 6 பேர் கூட்டமைப்பில் தெரிவாயினர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குச் சென்றார். ஈபிடிபி-2 ஐதேக-1.

## 2004 தேர்தல்:




விடுதலைப் புலிகளின் பின்புலத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்த முதல் தேர்தல் இது. இத்தேர்தலில் கூட்டமைப்பிலிருந்து தவிகூ வெளியேற தமிழரசுக் கட்சி உள்நுழைந்தது. வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட கூட்டமைப்பு சார்பில் 8 பேர் தெரிவாயினர். தமிழ் காங்கிரஸ் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழரசுக் கட்சி சார்பில் மாவை சேனாதிராஜா, என் ரவிராஜ், டெலோ சார்பில் சிவாஜிலிங்கம், ஈபிஆர்எல்எப் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தெரிவாகியிருந்தனர். செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் கிட்ணன் ஆகியோர் கட்சி சார்பின்றி தெரிவாயினர். ஈபிடிபி சார்பில் டக்ளஸ் தேவானந்தா தேர்வானார். ஐதேக இங்குப் போட்டியிட முடியாத சூழலில், மகேஸ்வரன் கொழும்பில் போட்டியிட்டு வென்றார்.




## 2010 தேர்தல்:

போர் முடிந்த பிறகு நடைபெற்ற முதலாவது தேர்தல். வாக்காளர்களின் எண்ணிக்கை ஏழு லட்சத்தைக் கடந்தாலும் வாக்களித்தவர்கள் 23மூதான். போர் பிரதேசத்தில் இருந்த மக்களிடையே வாக்களிப்பில் ஆர்வம் இல்லாததையே இது காட்டியது.

கூட்டமைப்புக்கு ஐந்தும் ஐமசுமு வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்ட ஈபிடிபிக்கு மூன்று ஆசனங்களும் கிடைத்தன. கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட ஐதேக உறுப்பினர் மகேஸ்வரனின் மனைவி விஜயகலா அக்கட்சி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றம் சென்றார்.



## 2015 தேர்தல்:

வாக்காளர்களின் எண்ணிக்கையில் சுமார் 2 லட்சம் வீழ்ச்சி ஏற்பட்டதால் ஆசனங்களின் எண்ணிக்கை ஏழாகக் குறைந்தது கூட்டமைப்பு சார்பில் மாவை சேனாதிராஜா, எஸ்.சிறீதரன், ஈ.சரவணபவான், த.சித்தார்த்தன் மற்றும் சுமந்திரனும் வென்றார். இத்தேர்தலில் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா ஆகியோர் தோல்வி. விஜயகலா மகேஸ்வரன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் வெற்றி பெற்றனர். 2010 போல் தமிழ் காங்கிரஸுக்கு இம்முறையும் ஏமாற்றமே.

*தொடரும்...*

# முல்லைத்தீவில் பல்கலைக்கழகம்! ஆனால் பெரும்பான்மையின மாணவர்கள் அதிகமாம்

முல்லைத்தீவில் புதிய பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் இடம்பெற்று வருவதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது

முல்லைத்தீவு, களுத்துறை, நுவரெலிய, மாத்தளை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலேயே புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்தப் பல்கலைக்கழகங்களை அமைப்பதற்கான திட்டங்களை தயாரிப்பதற்காக, பேராசிரியர்களைக் கொண்ட ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உதவித் தலைவர், பேராசிரியர் ஜனித லியனகே தெரிவித்தார்.

இந்த புதிய பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிகள், Z-score அடிப்படையில் மேற்கொள்ளப்படாது என்றும், கல்விப் பொது தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவரும் தோற்றக் கூடிய புலமைத் தேர்வு மூலமே, அனுமதிகள் வழங்கப்படும் என்றும் மானியங்கள் ஆணைக்குழு தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த மாவட்டங்களின் வேலைச் சந்தையை அடிப்படையாகக் கொண்டதாக இந்த பல்கலைக்கழகங்களில் பட்ட மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது இந்தப் பல்கலைக்கழகங்களை அமைப்பதற்கான காணிகளை பெறுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்றும் மானியங்கள் ஆணைக்குழுவின் உதவித் தலைவர் பேராசிரியர் லியனகே மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பல்கலைக் கழகம் அமைக்கப்படவுள்ளது தொடர்பாக கொழும்பில் வசிக்கும் தமிழ் பேசும் கல்வியாளர் ஒருவர் தகவல் தருகையில் இந்த பல்கலைக் கழகத்தில் பெரும்பான்மையின மாணவர்களே அதிகளவில் அனுமதி பெறவுள்ளார்கள் என்றும் பௌத்த தர்ம துறையும் இங்கு அமைக்கப்படவுள்ளதெனவும் கவலையடன் தெரிவித்தார்.

# கிளிநொச்சி பரந்தன் பகுதியில் வாகனமொன்றால் மோதப்பட்டு 18 மாடுகள் உயிரிழந்துள்ளன!

கிளிநொச்சி பரந்தன் ஏ35 வீதியின் வெலிக்கண்டல் சந்தி பகுதியில் இன்று வியாழன் அதிகாலை வாகனமொன்றில் மோதி 18 மாடுகள் உயிரிழந்துள்ளன. இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

விசுவமடு பகுதியில் இருந்து ஏ35 வீதியூடாக வேகமாக வந்த டிப்பர் வாகனமே இவ்வாறு மாடுகளை மோதியுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவத்தையடுத்து டிப்பர் வாகனம் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக விபத்தினை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கால்நடை பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பயிர்ச்செய்கைக்கு உட்படாத பகுதியான வெலிக்கண்டல் பகுதியில் வைத்து பராமரித்து வருகின்ற நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





# சட்டத்தரணி கே.வி.தவராசாவின் சட்ட வாதத்தால் கடற்புலிகளின் தலைவி மீலா விடுதலை!

## பிரான்ஸ் தூதரக தமிழ் அதிகாரியான நயனா கணேசன் விசாரணைக்கு பெரிதும் உதவினார்



சட்டத்தரணி கே.வி. தவராசா

• பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட அரசியல் கைதிக்கு 10 நாட்களில் பிணை வழங்கப்பட்ட ஒரே வழக்கு இந்த வழக்காகும்.

• தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கடற்புலிகளின் தலைவி பகிரதியும் 9 வயது மகள் பார்கவியும் விடுதலை.

• பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட பகிரதி முருகேசுவின் ஒரே மகளான ஒன்பது வயதான பார்கவி பிறப்பால் ஒரு பிரெஞ் நாட்டவராகையினால் தாயினதும் மகளினதும் விரைவான விடுதலை சாத்தியமானது.

• பகிரதி கைது 1998ம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டிற்கு சென்றிருந்த மீலா என்ற பகிரதி முருகேசு சுகவீனம் அடைந்திருந்த தனது தாயாரையும் உறவினர்களையும் பார்ப்பதற்காக இலங்கை வந்து சில வாரங்கள் தங்கி மீண்டும் பிரான்ஸ் நாட்டிற்கு செல்வதற்காக 2015ம் ஆண்டு பங்குனி மாதம் 2ம் திகதி கட்டுநாயகா விமான நிலையத்திற்கு தனது ஒன்பது வயது மகளுடன் வந்திருந்த பகிரதி முருகேசு பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

பகிரதி போலீசாரால் கைது செய்யப்பட்ட பொழுது தாயைப் பிரிய மறுத்த பிரான்ஸ் நாட்டின் குடியுரிமையைக் கொண்ட பகிரதியின் ஒரே மகளான பார்கவியும் பயங்கரவாதத் தடைப் பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை நடாத்தப்பட்ட பத்து நாட்களும் சிறுமி பார்கவி தனது தாயுடன் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்.

• பகிரதிக்கு எதிரான விசாரணைகள். சந்தேக நபரான பகிரதி முருகேசுவிற்கு எதிராக விசாரணையை நடாத்திய பயங்கரவாதத் தடைப் பிரிவு பொலிசார் சந்தேக நபரான பகிரதி முருகேசுவையும் அவரது மகளான பார்கவியையும் பத்து நாட்கள் தடுப்புக் காவலின் பின்னர் நீதிமன்றம் அழைத்து வரப்பட்டு விசாரணையின் முதல் அறிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

• விசாரணை அறிக்கை. அந்த அறிக்கையில் 1991ம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து ஆயுதப் பயிற்சிகள் பெற்ற பின்னர் 1996ஆம் ஆண்டு கடற் புலிகள் பிரிவிற்கு உயரத்தப்படுவதற்கு முன்னர் நான்கு ஆண்டுகள் அவர் ஒருதொடர்பாடல் உத்தியோகத்தராகப் பணியாற்றி உள்ளார்.

• பகிரதி சாம்ராஜ் திருமணம். சந்தேக நபரான பகிரதி முருகேசு. சாம்ராஜ் என அழைக்கப்படும் சிவசுப்பிரமணியம் ஜெயகணேசை விடுதலைப் புலிகள் அமைப்பின் சம்மதத்துடன் திருமணம் செய்துள்ளார். பகிரதியை பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

திருமணத்தின் பின்னர் பகிரதி முருகேசுவும் அவரது கணவரும் விடுதலைப் புலிகளின் மேலதிகாரிகளின் ஆசீர்வாதத்தோடு அவ்வியக்கத்தின் சர்வதேச செயற்பாடுகளின் பிரிவு இயக்குனர்களாக செயற்படுவதற்காக 2005ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சந்தேக நபரான பகிரதி பிரான்ஸ் நாட்டிற்கு குடிபெயர்வதற்கு முன்னர் கடற் புலிகளின் மகளிர் பிரிவின் ஒரு தலைவியாக பணியாற்றினார் என பயங்கரவாதப் புலனாய்வுப் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

• பகிரதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். பயங்கரவாதத் தடைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பகிரதி முருகேசுவும் அவரது மகளான பார்கவியையும். பயங்கரவாதத். தடைப் பிரிவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட பத்து நாட்களில் கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

• பிணை மனு. பகிரதி முருகேசு சார்பாக பிணை வழங்கும்படி நீதிமன்றிற்கு முன்வைக்கப்பட்ட எனது சமர்பனத்தில். இந்த வழக்கின் சந்தேக நபரான பகிரதி முருகேசு 2005 ஆம் ஆண்டிலிருந்து பிரான்சில் வாழ்ந்து வருகிறார்.

தனது ஒன்பது வயது மகளுடன் 2015ம் ஆண்டு பெப்ரவரி 9 ஆம் திகதி கிளிநொச்சியில் வசிக்கும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளியான தனது தாயை பார்வையிட்டு ஆறுதல் கூறுவதற்காவே இந்த நாட்டிற்கு வருகை தந்தார் .

கிளிநொச்சியல் அவரது தாயார் வீட்டிலிருந்து புறப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் இரகசிய பொலிசார் அவரை விசாரித்தனர் எனினும் அவரை கைது செய்வதற்கு அப்போது எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

• பார்கவி ஒரு பிரெஞ்சு பிரஜை. இந்த வழக்கில் சந்தேக நபரான பகிரதி முருகேசுவின் ஒன்பது வயதுடைய ஒரே மகளான பார்கவி பிறப்பால் ஒரு பிரெஞ் பிரஜை . பிரெஞ் மொழியில் மட்டுமே தேர்ச்சியுடையவராகையால் இவ்விசாரணை காலத்தில் அவரது கல்வியை தொடர்தல் இருப்பிடம் தொடர்பில் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

• சட்டமா அதிபர் பிணை வழங்க சம்மதம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பிணை வழங்கும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு மட்டுமே உள்ளபடியால் சட்டமா அதிபர் திணைக்களம் நிபந்தனை அடிப்படையிலான பிணையில் சந்தேக நபரை விடுதலை செய்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து கொழும்பு மேலதிக நீதவான் அருனி ஆட்டிகல சந்தேக நபரான பகீரதி முருகேசுவை மூன்று நிபந்தனைகளுக்கமைய பிணை வழங்கினார்.

(1) இரண்டு வாரங்களுக்கொருமுறை முப. 9 மணிக்கும் நற்பகல் 12 மணிக்குமிடையில் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும்.

(2) கடவுச் சீட்டு நீதிமன்றிற்கு கையளிக்க வேண்டும்

(3) ரூபா 200 000 பிணை விதிக்கப்பட்டது.

தாயும் மகளும் நீதிமன்றத்திலிருந்து வெளியேறும் பொழுது நீதிபதி நீதிமன்ற பதிவாளர் வழக்குத் தொடர்வர்களான பொலிசார் வழக்கு விசாரணைக்கு வந்திருந்த வழக்காளிகள் சாட்சியமளிக்க நீதிமன்றம் வருகை தந்தவர்கள் பார்வையாளர்கள் அனைவரது உணர்வு பூர்வமான பார்வைகள் சிறுமி பார்கவிமீதே விழுந்தன. இந்த வழக்கில் சந்தேக நபரான பகிரதி முருகேசுவிற்கு நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டதையடுத்து தொடர்ந்து மேலதிக விசாரணை மேற்கொண்ட பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசார் ஒவ்வொரு தவணையிலும் மேலதிக விசாரணை அறிக்கைகளை தாக்கல் செய்தனர்.

• சாம்ராஜ் – சிவசுப்பிரமணியம் ஜெய்கணேஷ் விசாரணை அறிக்கைகள்.

சந்தேக நபரான பகிரதி முருகேசுவின் கணவரான சாம்ராஜ் என அழைக்கப்படும் சிவசுப்பிரமணியம் ஜெயகணேஷ் தற்போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிகளுக்குச் சொந்தமாகவிருந்த உலகெங்குமுள்ள ஏறத்தாழ

.(1) 200 எரிபொருள் சேவை நிலையங்களையும்

(2) தாய்லாந்து மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளிலுள்ள பல சிறப்பங்காடிகளையும்

(3) ஐவரிகோஸ்ட்டில் அமைந்துள்ள துருப்பிடிக்காத உருக்கு உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையையும் முகாமைத்துவம் செய்வதாகவும் சாம்ராஜ் பிரான்சிற்குச் சென்றதன் நோக்கம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவு வலையமைப்பொன்றை கட்டியெழுப்புவதாகும் என்று புலனாய்வு விசாரணையில் தெரியவந்ததாகவும் அறிக்கை சமர்ப்பித்ததுடன் மேலும் அந்த அறிக்கையில்

• சாம்ராஜ் காஸ்ட்ரோவின் நெருக்கமான உதவியாளர்.



சந்தேக நபரான பகிரதி முருகேசுவின் கணவரான சாம்ராஜ் காஸ்ட்ரோவின் ஒரு நெருக்கமான உதவியாளராவார். நிதியை தனியாகக் கையாள்வதில் காஸ்ட்ரோ கேபியை நம்பாததால் காஸ்ட்ரோவிற்கு அறிக்கையிடுவதற்காக சாம்ராஜ் அனுப்பிவைக்கப்பட்டதுடன் புலம் பெயர்ந்த தமிழர்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு கிளைகளை நிருவகித்த நெடியவனோடு சாம்ராஜ் செயற்பட்டதாகக் அறிக்கையில் பதியப்பட்டதுடன் மேலும் அந்த மேலதிக அறிக்கையில் கூறப்பட்டதாவது ஒஸ்லோவைத் தளமாகக் கொண்டு இயங்கிய நெடியவன் உலகெங்கும் நிதி திரட்டியபோது சாம்ராஜ் ஆயுதங்களை கொள்வனவு செய்து அப்பணத்தைச் செலவிட்டதுடன் சாம்ராஜ் சர்வதேச ஆயுத வியாரிகளோடு தொடர்புகொண்டு செயற்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்காக ஆயுதங்களை கொள்வனவு செய்ததாகவும் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதுடன் சாம்ராஜின் பணிகளுள் மேலும் நிதிகளைத் உருவாக்குமுகமாக வெளிநாடுகளில் பாதுகாப்பான இடங்களில் பணத்தை முதலீடு செய்வதும் செயல்படுத்தப்பட்ட தெனவும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மேலும் அந்த அறிக்கையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் சாம்ராஜினால் கையாளப்பட்ட நிதிகள் அவரிடமே இருந்தன அதனைப் பெறுவதற்கு கேபி எனும் பத்மநாதன் அனுமதிக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

• புத்துயிரூட்டல்

2010ஆம் ஆண்டின் பின்னர் சாம்ராஜின வகிபாகம் மாறியது தமிழ் ஈழவிடுதலைப் புலிகளுக்கு புத்துயிரளிப்பதற்காக அவர் நெடியவனோடு பணியாற்றத் தொடங்கினார். அவரது அண்மைக்கால செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் இளைஞர் நிகழ்வுகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் நிதியளிப்பதாக கண்டறியப்பட்டுளளது.

பாதுகாப்பு அமைச்சிக்கு வழங்கப்பட்ட 2013 ஆம் ஆண்டு அறிக்கையின்படி சாம்ராஜ் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் அணியினதும் பணத்தை சுத்தப்படுத்தல் ஆயுத மற்றும் வர்த்தகம் மற்றும் மனிதக் கடத்தல் போன்ற குற்றவியல் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகள் மூலம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நிதி சேகரிப்பதற்குப் பொறுப்பான அவ்வியக்கத்தின் குற்றவியல் சர்வதேச பிரிவினதும் ஓர் அங்கமாவார்.

இக்குழுவின் செயற்பாடுகள் 2010ம் ஆண்டு ஆரம்பத்தில் ஆரம்பித்தன. சாம்ராஜின் குழு உறுப்பினர்கள் இலங்கையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை நிர்மூலமாக்கிய இராணுவ நடவடிக்கைகளின் இறுதிக் கட்டங்களில் தப்பியோடிய ஒரு சிரேஸ்ட புலனாய்வுப் பிரிவு உறுப்பினரான வினாயகம் அச்சுதன் மற்றும் சங்கர் ஆகியோராவார் எனக் குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது பகிரதிக்கு எதிராக வழக்குத் தொடுக்க சான்றுகள் இல்லை எனவே சந்தேக நபரான பகிரதி முருகேசு விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற எனது வாதத்தில்!

• பகிரதி சாம்ராஜ் விவாகரத்து.

இந்த வழக்கின் சந்தேக நபரான பகிரதி தனது முன்னாள் கணவரான சாம்ராஜியிடம் விவாகரத்து பெற்றமைக்கான சட்டரீதியான ஆவணத்தை பொலீசாரிடம் கையளித்துள்ளார். 2015ம்ஆண்டு பங்குனி. மாதம் 2ம் திகதி கட்டுநாயகா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டை வதிவிடமாகக் கொண்ட பகிரதி முருகேசு கொழும்பு நீதவான் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டு 15 மாதங்கள் கடந்த நிலையில் சந்தேக நபருக்கு எதிராக விசாரணைகளை நடாத்திய பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிசார் சந்தேக நபரான பகிரதி முருகேசுவின் முன்னாள் கணவரான சாம்ராஜ்க்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி அறிக்கைகளை மட்டும் தாக்கல் செய்துள்ளனர்.

சந்தேக நபரான பகிரதி முருகேசுவின் கணவரான சாம்ராஜ்க்கு எதிராவே பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிசார் பல குற்றச் சாட்டுக்களை சுமத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். சந்தேக நபரான பகிரதி முருகேசு கடற் புலிகளின் மகளிர் பிரிவின் ஒரு தலைவியாக பணியாற்றினார் என பயங்கரவாதப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்த போதிலும் அதனை உறுதிப்படுத்த எந்தவித சான்றுகளையும் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலீசார் முன்வைக்கவில்லை .

அறிக்கைகளை மட்டும் சான்றாகக் கொண்டு வழக்கத் தாக்கல் செய்ய முடியாது என எனது வாதத்தை முன்வைத்ததுடன் மேலும் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தது யாதெனில்.

மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய போதிய சான்றுகள் காணப்படின் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட சந்தேக நபரான பகிரதி முருகேசு விடுதலை செய்யப்படவேண்டும்.

பிரான்ஸ் நாட்டின் குடியுரிமையைக் கொண்ட பகிரதி முருகேசுவின் மகள் அவரது தாயார் கைது செய்யப்பட்டதிலிருந்து கடந்த 15 மாதங்களாக தனது பிறந்த நாட்டிற்கு செல்ல முடியாததினால் கல்வியை தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு சந்தேக நபருக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய போதிய சான்றுகள் உள்ளனவா என பயங்கரவாதத் தடைப் பொலிசார் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையை பெற்று சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை இந்த நீதிமன்றிற்கு அறிவிக்கவேண்டும் என எனது வாதம் முன்வைக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை நீதிமன்றிற்கு தெரிவிப்பதாக பொலிசார் நீதிமன்றுக்கு தெரிவித்திருந்த நிலையில் பிரெஞ்சு தூதரக அதிகாரிகள் சட்டமா அதிபரை தொடர்பு கொண்டதையடுத்து சட்டமா அதிபர் இந்த வழக்கின் சந்தேக நபரான பகிரதியை விடுதலை செய்ய நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி அருணு ஆட்டிகல பகிரதி முருகேசுவை விடுதலை செய்தார்.

• தூதரக உதவி. பகிரதி முருகேசுவின் ஒரே மகளான பார்கவி பிறப்பால் ஒரு பிரெஞ் நாட்டவராகையினால் பிரெஞ் தூதரகம் அவருக்கு தூதரக உதவிகளை வழங்கியது.

அப்பிள்ளை பிரெஞ் மொழியில் மட்டுமே தேர்ச்சியுடையவராகையால் இவ்விசாரணை காலத்தில் அவரது கல்வி தொடர்பாக பிரெஞ் தூதரகம் கரிசனை வெளியிட்டமை தாயும் மகளும் விடுதலையாவதற்கு முக்கிய காரணமாகும்.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட சகல விசாரணை தினங்களிலும் தூதரக அதிகாரிகள் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

தமிழ் அதிகாரியான நயனா கணேசன் பகீரதியினது விடுதலையில் பெரும் பங்காற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்திய வங்கிகளில் ரூ.350 கோடி மோசடி செய்த பாஸ்மதி அரிசி ஏற்றுமதியாளர் கனடாவுக்கு தப்பி ஓட்டம்

**- எமது சென்னைச் செய்தியாளர் தங்கம் -**

ஆறு வங்கிகளில், 350 கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கி, திருப்பி செலுத்தாமல், இரண்டு ஆண்டுகளுக்கு முன், கனடாவுக்கு தப்பிவிட்ட, பஞ்சாபை சேர்ந்த தொழிலதிபர் மீது, சி.பி.ஐ., வழக்குப் பதிவு செய்துள்ளது. பஞ்சாப் மாநிலம், அமிர்தசரசை தலைமையிடமாக வைத்து செயல்பட்ட, "பஞ்சாப் பாஸ்மதி ரைஸ் லிமிடெட்"டின் நிர்வாக இயக்குனர், மஞ்சித் சிங் மக்னி. இவர் மகன் குல்வீந்தர் சிங் மக்னி, மருமகள் ஜஸ்மீத் கவுர் ஆகியோரும், நிறுவனத்தின் இயக்குனர்களாக உள்ளனர்.




இவர்கள் அனைவரும், கனரா வங்கி கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள வங்கிகளிடம், 350 கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியிருந்தனர்.

ஆனால் வாங்கிய கடனை, மஞ்சித் சிங் மக்னி குடும்பம் திருப்பிச் செலுத்தவில்லை. இது தொடர்பாக வங்கிகள், பலமுறை, "நோட்டீஸ்" அனுப்பியும், மக்னி குடும்பத்தினர், கடனை திருப்பி செலுத்தவில்லை. இதற்கிடையே, 2018ல் மக்னி, வட அமெரிக்க நாடான கனடாவுக்கு சென்று விட்டது தெரிந்தது. இதையடுத்து, இந்த மோசடி தொடர்பாக, கடந்த ஆண்டு மார்ச்சில், வங்கிகள், ரிசர்வ் வங்கியிடம் புகார் செய்தன. இது பற்றி, சி.பி.ஐ., யிடம் உடனடியாக புகார் செய்யுமாறு, ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியது. ஆனால், வங்கிகள், கடந்த மாதம் தான், சி.பி.ஐ.,டம், இந்த மோசடி பற்றி புகார் செய்தன.இதையடுத்து, தொழிலதிபர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது, சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்த மோசடி தொடர்பாக, அமிர்தசரசில் உள்ள, மகன் வீடு மற்றும் நிறுவனத்தில், இரண்டு நாட்களுக்கு முன் சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனை நடத்தி, பல ஆவணங்களை கைப்பற்றியுள்ளனர். சி.பி.ஐ.யிடம் உடனடியாக புகார் செய்ய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டும், வங்கிகள், 15 மாதங்கள் கழித்து, புகார் செய்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.



# மும்பையில் மர்ம நபர்களால் அம்பேத்கர் வீடு சேதமாக்கப்பட்டது




மும்பையில் அம்பேத்கர் வசித்த வீட்டை மர்மநபர்கள் சேதப்படுத்தினர். இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த மாநில உள்துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இது குறித்து கூறப்படுவதாவது: அம்பேத்கரின் வீடு மும்பையின் தாதர் பகுதியில் ஹிந்து காலனியில் அமைந்துள்ளது. அவரது வீடு ராஜ்க்ருஹா என அழைக்கப்படுகிறது.

அம்பேத்கர் 1930 ம் ஆண்டில் மும்பையில் குடியேறிய போது ராஜ்க்ருஹாவில் கட்டப்பட்டது. மூன்று தளம் கொண்ட இந்த வீட்டில் தரை தளம் அம்பேத்கரின் தனிப்பட்ட உடமைகளை கொண்டிருக்கும் அருங்காட்சியகம் அமைந்துள்ளது. ஒருதளம் அம்பேத்கரின் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். நேற்று அடையாளம் தெரியாத மர்மநபர்கள் வீட்டின் முகப்பு பகுதியில் இருந்த பூந்தொட்டிகளை தள்ளிவிட்டு சேதப்படுத்தி உள்ளனர்.

இச்சம்பவம் குறித்து அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து உள்ளனர். இதனையடுத்து போலீஸ் விசாரணைக்கு மாநில உள்துறை அமைச்சர் அனில் தேஷ்முக் உத்தரவிட்டார். தொடர்ந்து அவர் கீச்சகத்தில் பதிவிட்டு இருப்பதாவது: தாதரில் உள்ள அம்பேத்கரின் இல்லமான 'ராஜ்க்ரூ'வில் அடையாளம் தெரியாத சில நபர்கள் நடத்திய தாக்குதல் கண்டிக்கத் தக்கது. போலீசார் இந்த விவகாரம் குறித்து விசாரித்து வருகின்றனர், மேலும் குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பதிவிட்டு உள்ளார்.




"மார்க்கம் பீச் கடற்கரையில் 27 வது வருடமாக"

கீரிமலை மாவிட்டபுரம் கந்தசாமி தீர்த்தம்

ஆடி அமாவாசை விரதம்

19.07.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 2.00 மணிவரை

தீர்த்தம், தர்ப்பணம், சிவலிங்க பூஜை, வழிபாடு, மோட்ச அர்ச்சனை பிரார்த்தனை, பஜனை, மகேஸ்வர பூஜை (ஆடி அமாவாசை விரதச் சாப்பாடு)

மிசிசாகா பிறம்ரன் ஶ்ரீ கணேசதுர்க்கா தேவஸ்த்தான பிரதம குரு சிவ ஶ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் அவர்களின் தலைமையில், பல அந்தண சிவாச்சாரியர்களும் கலந்து சிறப்பிக்கிறார்கள். 27 வது வருடத்தில் மார்க்கம் பீச் (Markham Beach, Sibbald Point Provincial Park) கடற்கரையில் காலை 8.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெறும். சென்ற வருடங்களைப்போல் இவ்வருடமும் ஆடி அமாவாசை தினத்தில் அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

அடியார்களுக்கு தீர்த்தக் கடற்கரையிலேயே சிறப்பான சுத்தமான கணேச துர்க்கா தேவஸ்தான சைவ விரதச் சாப்பாடு தலை வாழை இலையில் வழங்கப்படும். அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம். இம்முறை 27வது வருடத்தை முன்னிட்டு சங்கீத இன்னிசை, பக்திப்பாடல், இசை நிகழ்ச்சி நடைபெறும்.

ஸ்காபிரோ, நோத்யோர்க், எற்றோபிக்கோ, மிஸ்சிசாகா, பிரம்ரன் ஆகிய இடங்களில் இருந்து வரும் அடியார்கள் வசதி கருதி விசேட பஸ் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பஸ் வசதி தேவைப்படுபவர்கள் முன்கூட்டியே தொடர்புகெள்ளவும்.

முக்கிய குறிப்பு:- மார்க்கம் பீச் கடற்கரையில் வழக்கமாக வருடா வருடம் வழமையாக நடைபெறுவது போன்று இம்முறையும் ஆடி அமாவாசை விரதத்திற்காக அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து விரதகார அன்பர்களும் கலந்து கொண்டு வாழ்வில் வளம் பெறுக.

தீர்த்தக்கரையில் சங்கர்ப்பம் செய்து அனைவரும் தீர்த்தமாடி தர்ப்பணம் செய்யும் வசதியும் தலை வாழை இலை அறுசுவை விரதச்சாப்பாடும் மார்க்கம் பீச் கடற்கறையில் மட்டுமே உண்டு

மேலதிக தொடர்புகளுக்கு
சிவஶ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்
905-501-0011 | 905-405-0011 | Cell: 416-271-2181
ஸ்காபரோ - திரு. சின்னத்தம்பி கனகலிங்கம் 416-844-0565
திரு - சோமசச்சிதானந்தம் 647-202-3234

GLORIOUS PRINTERS - 905-471-2500

# பல தலைவர்களின் உழைப்பால் உருவான வீடு எம். ஏ. சுமந்திரனால் இன்று இடிக்கப்படுகின்றது.

**- "மாம்பழம்" ஐங்கரநேசன் தெரிவிப்பு**

வாக்குகளைச் சிதறடித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிப்பதற்கும், வீட்டுச் சின்னத்தை இல்லாமல் ஆக்குவதற்கு மேமாற்று அணி என்று சொல்லிக் கொள்பவர்களும் பல சுயேச்சைக் குழுவினர்களும் பாராளுமன்றத் தேர்தலில் இறக்கிவிடப்பட்டுள்ளார்கள் என்று கூட்டமைப்பு வேட்பாளர்கள் தேர்தல் கூட்டங்களில் பேசிவருகிறார்கள். கூட்டமைப்பை மற்றவர்கள் அல்ல அவர்களே சிதைத்து வருகிறார்கள். தந்தை செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் அழகக்கோன், இராஜவரோதயம், இராசமாணிக்கம், அமிர்தலிங்கம் போன்ற





பல தலைவர்களின் உழைப்பால் உருவான வீடு இன்று எம். ஏ. சுமந்திரன் அவர்களாலேயே இன்று இடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பாராளுமன்றத் தேர்தலில் மாம்பழம் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றது. இதன் பரப்புரைக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (05.07.2020) கோண்டாவிலில் இடம்பெற்றபோதே முதன்மை வேட்பாளரான பொ. ஐங்கரநேசன் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசியவிடுதலைப் போராட்டத்தை ஜனநாயகவழியில் முன்னெடுத்துச் செல்லும் நோக்குடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



உருவாக்கப்பட்டது. விடுதலைப்புலிகள்தான் தங்களை உருவாக்கியதாக கூட்டமைப்பினரே சொல்லிவருகிறார்கள். ஆனால், விடுதலைப்புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்டதும் கூட்டமைப்புப்படிப்படியாகத் தன்னைப் புலி ஆதரவுநீக்கம் செய்ததோடு,தமிழ்த் தேசியநீக்கத்தையும் செய்துவருகிறது.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது தமிழினப்படு கொலையே என்று உலக நாடுகளின் பல தலைவர்களும் கூறிவரும் நிலையில், கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் அவர்கள் இனப்படுகொலை நடைபெறவில்லை அதற்கான ஆதாரங்கள் இல்லை என்று சொல்லி இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்கும் விதமாகவே செயற்பட்டார். இவர்களே, போர்க்குற்றங்கள், மனித உரிமைமீறல்கள் தொடர்பான விசாரணையையே இல்லாமல் செய்கின்ற அரசாங்கத்தின் சூழ்ச்சிநிரலுக்கு அமைவாகத் தமிழ்மக்களின் உணர்வுகளைப் புறந்தள்ளிக்காலநீடிப்பைப் பெற்றுக்கொடுத்து அரசாங்கத்தைப் பிணையெடுத்தார்கள். இவையே கூட்டமைப்பின் கூடாரம் இன்று காலியாகிக் கொண்டிருப்பதற்கான காரணங்கள் ஆகும்.



இப்போது தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளைத் தொடர்வதற்கு மீண்டும் தங்களுக்கு ஆணைவழங்குமாறு, கடந்த தேர்தல்களின்போது பாடிய அதேபல்லவியை மீண்டும் பாட ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் ஆணைகேட்பதுகாணாமல் போனவர்களைக் கண்டறிவதற்காகவோ அரசியல் கைதிகளைவிடுவிப்பதற்காகவோ அல்ல. நல்லாட்சி அரசாங்கத்தில் வகித்துவந்தநிழல் அமைச்சர்கள் பதவிகளை மீண்டும் பெறுவதற்காகவே ஆணை கோரிநிற்கிறார்கள். தமிழ்மக்கள் இந்தப் போலித்தேசியவாதிகள் குறித்து விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



# இலங்கை, பெண்களுக்கு பாதுகாப்பான நாடா?

## ரஸ்ய இளம்பெண் முகநூலில் கேள்வி எழுப்புகின்றார்

கொழும்பு - காலி முகத்திடல் கடற்கரையோரத்தில் வைத்து ரஷ்ய நாட்டு இளம்பெண் ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்த முயற்சித்த சில இளைஞர்கள் தொடர்பில் அதிகளவில் பேசப்படுகின்றது.

இந்தப் பெண் அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண் தனது முகநூல் பக்கத்தில் இலங்கையானது, பெண்களுக்கு பாதுகாப்பான நாடா? என வினவியுள்ளமை தற்போது பெரும்பாலானோரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

தனது நண்பர்களுடன் பாதுகாப்பாக காலத்தை கடத்துவதற்கு வெளிநாட்டு யுவதிகளுக்கு இலங்கையில் சந்தர்ப்பம் உள்ளதா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ரஸ்யாவைச் சேர்ந்த இந்த இளம்பெண் கொழும்பில் தற்போது வாழ்ந்து வருகின்றார்.

• பாலியல் துன்புறுத்தல் முயற்சி: இளம் பெண்ணுக்கு என்ன நடந்தது?

குறித்த இளம்பெண் கடந்த 5ஆம் தேதி தனது மூன்று நண்பர்களுடன் காலி முகத்திடலுக்கு மாலை வேளையில் சென்றுள்ளார். இதன்போது மதுபோதையில் இருந்த இளைஞர் ஒருவர் தனக்கு முதலில் இடையூறு செய்து துன்புறுத்தலுக்கு உட்படுத்தவும் முயற்சித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இளைஞர்கள் தனது உடலைத் தொட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

தன்னுடன் வருகை தந்த நண்பர்களை பார்த்து மதுபோதையில் இருந்த இளைஞர் இவளைப் பகிர்ந்துகொள்வோம் என கூறியதாகவும் அதனை பொருட்படுத்தாது தனது நண்பர்களுடன் அந்த இடத்தைவிட்டு செல்ல தாம் முயற்சித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த இளைஞருடன் வருகைத் தந்த 10 பேர் வரையான இளைஞர்கள் தன்னை பின்தொடர ஆரம்பித்ததாக அவர் கூறுகின்றார்.

இதன்போது தன்னை பாதுகாக்க முயற்சித்த தனது நண்பர்கள் மீது குறித்த இளைஞர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

தாக்குதல் நடத்திய போதிலும் தனது நண்பர்கள் குறித்த இளைஞர்களை அமைதிப்படுத்த முயற்சித்த நிலையில் அது வெற்றியளிக்கவில்லை என அவர் கவலையாக கூறியுள்ளார்.

அமைதிப்படுத்த முயற்சித்த தனது நண்பர் மீது மேலும் பலர் தாக்குதல் நடத்தியதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த நிலையில் தான் தனது செல்பேசியில் சம்பவத்தை பதிவு செய்ய ஆரம்பித்ததை அவதானித்த குறித்த இளைஞர்கள் பின்னர் அமைதியடைய ஆரம்பித்ததாக பாதிக்கப்பட்ட பெண் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான நிலையில் அங்கிருந்த ஓர் இளைஞர் தனது கையின் மீது செல்பேசி கீழே விழும் வண்ணம் தாக்குதல் நடத்தியதுடன் தனது நண்பர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தியதாக அவர் குறிப்பிடுகின்றார்.

பொது இடமொன்றில் இவ்வாறான துன்புறுத்தல்கள் இடம்பெற்ற வேளையில் அதனை தடுத்து நிறுத்த எந்தவொரு நபரும் முன்வரவில்லை என ர்'ய இளம்பெண் தெரிவிக்கின்றார்.

தனது ஃபேஸ்புக் பக்கத்தில் படமொன்றை வெளியிட்ட குறித்த ரஷ்ய யுவதி இந்த பிரச்சனையை முதலில் ஆரம்பித்தவர் அவர் என கூறியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் போலீசாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் சுமார் 20 நிமிடங்களின் பின்னர் போலீசார் சம்பவ இடத்திற்கு வருகை தந்ததாக அவர் தெரிவிக்கின்றார்.

போலீசார் சம்பவ இடத்திற்கு வருகைத் தருகின்ற போதிலும் குறித்த இளைஞர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறியதாக கூறியுள்ள அவர் அதன் பின்னர்தாம் போலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அடையாளம் காண்பதற்கு உதவிகளை வழங்குமாறு ரஷ்ய யுவதி கேட்டுகொண்டுள்ளார். இந்த முறைப்பாட்டை அடுத்து கொழும்பு கோட்டை போலீசார் நடத்திய சுற்றி வளைப்பில் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக போலீசார் கூறுகின்றனர்.

சந்தேகநபர்களை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக போலீசார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தை எதிர்கொண்ட பெண்ணை தொடர்புகொள்ள முயற்சித்த போதிலும் அவரை தொடர்புகொள்ள முடியவில்லை. இதேவேளை இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டும் என ரஷ்ய யுவதி ஃபேஸ்புக்கில் செய்தி வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே இலங்கை பெண்களுக்கு பாதுகாப்பான நாடா? என்ற கேள்வியை அவர் எழுப்பியுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் பெரும்பாலும் சுற்றுலாத்துறையையும் எதிர்பார்த்தேகாணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் கடந்த சில வருடங்களாக பல்வேறு விதத்திலும் தொடர்ச்சியாக சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டு வருவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா முடக்கநிலை காரணமாக சுற்றுலாத் துறை முழுமையாக வீழ்ச்சி கண்டுள்ளது.

இவ்வாறான நிலையில் வெளிநாட்டு யுவதியொருவர் இவ்வாறான கேள்விகளை எழுப்பியுள்ளமைஇலங்கையின்நற்பெயருக்கும் சுற்றுலாத் துறை மீதான நம்பிக்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என சுற்றுலாத்துறை சார்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.


Amma Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Amma Apple Cider with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml


Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


SKN
SKN FINANCIAL
www.sknfinancial.com
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்
$ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
$ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
$ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
$ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
$ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்
முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது
உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com
SCARBOROUGH
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238
BRAMPTON
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800


அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
உங்கள் பழைய
நகைகளை அதியுயர்
பெறுமானத்திற்கு எம்மிடம்
விற்றுக்கொள்ளலாம்
1.5% முதல்
2.0%
வட்டி மட்டுமே
(per month)
416-757-0034
416-994-3861
உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்
105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்
எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

# உங்கள் நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் அன்புக்குரியவர்களைப் பாதுகாப்பாகச் சந்திப்பதற்கு, சமூகக் குழுமங்கள் மற்றும் சமூக ஒன்றுகூடல்கள் வாயிலாக மேலதிக வாய்ப்புகள் உங்களுக்குத் தற்போது உருவாகியுள்ளன.

## சமூகக் குழுமங்கள்

- எப்போதுமே குறிப்பிட்ட 10 நபர்கள் வரையில் உள்ள மாறாத ஒரு குழுவாக இது இருக்க வேண்டும்
- இதில் கட்டியணைத்தல் போன்ற நெருங்கிய தொடர்பு அனுமதிக்கப்படுகின்றது
- நீங்கள் ஒரு குழுமத்தில் மட்டுமே இணைந்திருக்க முடியும்



## சமூக ஒன்றுகூடல்கள்

- 10 பேர் வரையில் வெவ்வேறு நபர்களைக் கொண்ட எந்தக் குழுவாகவும் இது இருக்கலாம்
- இதில் உடல்ரீதியான தூரத்தை (2 மீட்டர் இடைவெளியில்) கடைப்பிடிக்க வேண்டும்
- இங்கு 10 பேர் வரையிலுள்ள வெவ்வேறு குழுக்களுடன் நீங்கள் ஒன்றுகூடலாம்




மேலதிகத் தகவல்களுக்கு **Ontario.ca/socialcircles** ஐப் பார்வையிடவும்

Ontario

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# ஸ்ரீ காளிகாம்பா துர்க்காமாதா தேவி ஜோதிடம்



இந்தியாவில் தலைமுறை தலைமுறையாக ஜோதிடக் கலை வல்லுனர் வழிவந்த பிரபல ஜோதிடர் பண்டித் மூர்த்தி

**SRI KALI KHAMBA DURGA MATHA DEVI**

INDIAN ASTROLOGER, PSHYCHIC & SPIRITUALIST

Expert In Horoscope, Palmistry, Face Reading World Famous Indian Astrologer &Pshychic Reader passed away from generation to generation




## If You Are Having Problems? He Has A Solution!!

ARE YOU DISAPPOINTED MEETING ASTROLOGERS NOT GETTING SOLUTIONS?

Then Once Meet Our World Famous Indian Astrologer Shivananda BabaJi To Get Permanent Solution To All Your Problems Either Personal Life Or Professional Life In Just Few Days With Best Results.




Best Solution For Your Best Future

SPECIALIST IN BRINGING BACK LOVED ONES

TAKE RIGHT DECISION AT RIGHT TIME

★ Money Blessings
★ Love Problems
★ Health Problems
★ Relationship Problems
★ Husband & Wife Disputes
★ Family Arguments
★ Depression
★ Sexual Problems
★ Business Problems
★ People's Jealousy
★ Enemy Problems
★ House Protection
★ Divorce
★ Court Cases
★ Land Property Issues
★ Childless Couples
★ Drinking Problems
★ Marriage Problem
★ Education
★ Job/Work Problems
★ Drug Addictions
★ Intimacy Problems
★ Children's Problems
★ Negative Energy
★ Worries about Loved Ones ★

IF YOU ARE NOT SATISFIED WITH OTHER ASTROLOGERS THEN COME TO US AND GET ALL YOUR PROBLEMS SOLVED. 100% GUARANTEED!

OPEN 7 DAYS | 100% RESULT GUARANTEED GIVE LIFE LONG PROTECTION | 10AM TO 8PM

ALL RELIGIONS WELCOME | ALL READING ARE PRIVATE & CONFIDENTIAL | WALK-INS WELCOME

CALL AND BOOK AN APPOINTMENT

கைரேகை
கல்வி, உத்தியோகம்
இலட்சுமி வசீகரம்
பணப் பிரச்சனை
உடல்நலப் பிரச்சனை
வெளிநாட்டுப் பயணங்கள்
எதிரிகள் தொல்லை
சொத்து பிரச்சனைகள்
திருமணயோகம்
சர்ப்ப தோஷம்
பாலியல் பிரச்சனைகள்
நாம சட்சத்திரம்
தொழில், வியாபாரம்
வதிவிடப்பிரச்சனைகள்
காதல் பிரச்சனை
மனச்சோர்வு
குடும்ப பிரச்சனைகள்
விவாகரத்து
நீதிமன்ற வழக்குகள்
குழந்தைப் பாக்கியம்
கர்ப்பதோஷம்
மது போதை பழக்கம்
பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
கஸ்ட - நஸ்டங்கள் மற்றும் உங்கள் அன்பானவர்களைப் பற்றிய கவலையா என்னிடம் வாருங்கள் உங்கள் அனைத்து பிரச்சனைகளையும் 100% தீர்த்து வைக்கின்றேன்.

**PANDITH: MURTHY**

**647 - 390 - 7388**

67A Dundas St West,
Mississauga, ON, L5B 1H7
(Royal Jewellery Upstairs - Dundas St W & Confederation Pkwy Intersection)

#3

வீணை மைந்தன்

# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்



உலகப்புகழ் பெற்ற பட்டிமன்ற பேச்சாளரளில் ஒருவரான திருமதி. பாரதி பாஸ்கர் அவர்கள் இரு ஆண்டுகளுக்கு முன் புதிய தொழில் நுட்பத்துடன் மீண்டும் 50 ஆண்டுகள் கடந்து வெளியிடப்பட்ட “கர்ணன்” திரைப்பட வெற்றி விழாவில் உரையாற்றும் போது “நானும் எனது கணவரும் காலையில் ஆபீஸ் புறப்படும் போது அன்றைய நாள் மகிழ்ச்சியாக நீடிப்பதற்கு சிவாஜி அவர்கள் நடித்த பொற்கால படங்களில் இடம்பெற்ற பாடலொன்றை வீடியோ காட்சி மூலம் பார்த்து கேட்டு அனுபவித்து இன்புற்ற பின்னரே வீட்டை விட்டு வெளியேறுவோம்” என்று உற்சாகமாக பேசி மகிழ்ந்தார்.

குடும்பத்திற்கு எல்லா நன்மைகளையும் உண்டாக்கக்கூடிய மங்கலச் சொல் மனையாளின் பெருமைதான் “கணவனே கண்கண்ட தெய்வம்” என மனைவ-ியும் “ஈன்ற தாயை நான் கண்டதில்லை எனது தெய்வம் வேறெங்கும் இல்லை” என கவியரசின் வரிகளுடன் மனைவியை தாயாக கொண்டாடுவதும் தமிழர்தம் இல்லறவியல் பண்பாடு அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை எனும் கோட்பாட்டுடன் வாழும் தமிழர்

இல்வாழ்வை வாழ்க்கைத் துணை நலத்தை பெருமைப்படுத்தும் சினிமாக் காட்சிகளையும் அக்காட்சிகளை வலிமைப் படுத்திய நாயகன் நாயகிகள் சில-ரை காட்சிப்படுத்தி ப் பார்ப்போம் இல்லற வாழ்வின் பெருமையை உணராமல் அல்லது விளங்கிக் கொள்ளாமல் வெறும் இனக்கவர்ச்சி மையப்படுத்தி தற்காலிக இன்பங்களை றுகர்ந்து சலித்தபின் வேறு பல போலியான காரணங்களைச் சொல்லி புலம்பெயர்ந்த நாடுகளில் மணவாழ்வில் கசப்பான அனுபவங்களை எதிர்நோக்கும் தலைமுறையினர் அவசியம் நடிகர்திலகம் குடும்பத்தலைவனாக பாசமுள்ள தந்தையாக அன்பைப் பொழியும் கணவனாக விட்டுக்கொடுக்கும் தியாகியாக நட்பின் நாயகன் ஆக மொத்தத்தில் நல்ல தமிழனாக ஏற்று நடித்த சில சித்திரங்களை நினைவுக்கு கொண்டு வருவோம்.

நீ யார் என்று உன்னை ஒருவன் கேட்டால்... இந்தியன் என்று சொல்.. நீ யார் என்று இரண்டாவது முறையும் கேட்டால்... தேசத்தால் இந்தியன் மொழியால் “தமிழன்” என்று சொல்.. நீ யார் என்று மீண்டும் உன்னை கேட்டால்.. தமிழன் என்று சொல்.. என பேரறிஞர் அண்ணா சொன்னதை நினைத்துப் பார்க்கிறேன்.

யார் அந்த தமிழன் மனைவியை தாயாக தாயை தெய்வமாக மதிக்கின்ற தமிழன் தாய்மொழியை தாய் நாட்டை பூசிக்கின்ற, போற்றுகின்ற தமிழனாக வாழ்ந்து காட்டியவர் தான் நமது நடிகர் திலகம். நிஜ வாழ்வில் நான் சந்தித்த ஒரு அன்பரின் தாம்பத்திய வாழ்வு மிக மிக மகிழ்ச்சியாக இருப்பதற்கு “பாலும் பழமும்” படத்தில் டாக்டர் ரவி நடித்த சிவாஜி அவர்களை காரணம் என்று நன்றி ததும்பக் கூறினார் சென்னை நகரில் சந்தித்த நண்பரொருவர் 1996 பிப்ரவரியில் சென்னை அண்ணா கலையரங்கில் அருமை சகோதரர் அப்துல் ஹமீது அவர்களினால் லலிதா நகை

மாளிகையின் ஆதரவில் சன் டிவியில் ஒளிபரப்பான பாட்டுக்குப்பாட்டு படப்பிடிப்பு நிகழ்ச்சி தொடர்ந்து 5 நாட்கள் நடைபெற்றன இந்நிகழ்ச்சிக்கு திரு ஹமீது அவர்கள் தினமும் என்னையும் கூடவே அழைத்துச் செல்வார் அன்று அண்ணா கலையரங்கில் பாட்டுக்கு பாட்டு நிகழ்ச்சியில் பங்குகொள்ள வந்தவர்களுள் அறிமுகமானவர் தான் சேலம் மணி நாதன் என்பவர் இவர் ஒரு ஆசிரியர், பிரபல பத்திரிக்கை ஆசிரியர் திரு கார்மேகம் (வீரகேசரி) தினமணியில் பணியாற்றியவர் அவர்களின் மகன் திரு கே.முரளிதரன் அவர்களினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவர் திரு நாதன்.

நட்பு நிறைந்த இந்த சந்திப்பிற்கும் உரையாடலுக்கும் கருவாகவும் களமாகவும் அன்று விளங்கியது எங்கள் கலா புரு'ரின் நடிப்பாற்றலே. அண்ணே நான் நடிகர் திலகத்தின் பயங்கர ரசிகன் இதோ நிற்கிறாரே என் மனைவி இவளும் நானும் இவளுடன் நான் மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்துவதற்கு சிவாஜி சார் தான் முக்கிய காரணம் நான் ஆச்சரியம் மேலிட மகிழ்ச்சியுடன் அவரையும் மனைவியையும் பார்க்கிறேன். என் முகக் குறிப்பை உணர்ந்த மணிநாதன் மேலும் தொடர்ந்தார். பாலும் பழமும் படத்தில் டாக்டர் ரவியாக நடித்த சிவாஜி அவர்களே காரணம் என்று நன்றி ததும்பக் கூறினார்.வார்த்தைக்கு வார்த்தை சாந்தி... சாந்தி என்று அவர் மனைவியிடம் காட்டிய பாசம் பரிவு காதல் தான் அண்ணே, எனக்கு வரப்போகும் மனைவியுடன் எப்படி இல்லறம் நடத்த வேண்டும் என்ற முதல் பாடம்.

“நம்ம வள்ளுவர் அழகாக குறள் மூலம் சொல்ல சொல்லி இருக்கிறார் ஆனால் அதற்கு உயிர் கொடுத்து வடிவம் கொடுத்து மனைவியை நேசிப்பது என்பது இப்படித்தான் என்று அல்வா மாதிரி தூக்கி கொடுத்தாரே நம்ம சிவாஜி சார் அது அவருக்கு நடிப்பு எனக்கு வாழ்க்கை”.

அவர் நடித்தது நடிப்பு தான் இதுதான் மனைவி இடத்தில் உள்ள பாசம். இல்லற உறவு என்ற வரைவிலக்கணத்தை திரை மூலம் பல லட்சம் நெஞ்சங்களில் பதிய வைத்தவர் அந்த பாசத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டு நல்லறம் காண்பவர் தான் அன்பர் மணி நாதன் வாழ்க அவர்தம் தாம்பத்திய வாழ்வு!.

நடிகர் திலகம் அவர்களின் வாழ்க்கை துணையாக திரைப்படத்தில் திருமதி பத்மினி திருமதி. கே. ஆர். விஜயா திருமதி. சரோஜா தேவி திருமதி. அம்பிகா (வாழ்க்கை) ஆகியோர் நடித்த பல குடும்பப் படங்களின் திரைக்கதை உரையாடல் காட்சிகள் என்றும் தமிழ் சமூகத்தில் இல்லற வாழ்வின் அறம் சார்ந்த விழுமியங்களை பெருமைப்படுவதாக அமையப் பெற்றன.

குறிப்பாக பத்மினி அவர்களுடன் இணைந்து 50க்கும் மேற்பட்ட படங்களில் வெவ்வேறு காலங்களில் நடித்துள்ளார் குறிப்பாக “தெய்வப்பிறவி” “பாக்கியவதி“ “தங்கப்பதுமை” “பேசும் தெய்வம்” “இரு மலர்கள்” “வியட்நாம் வீடு” “தேனும் பாலும்” “பாலாடை” ஆகிய குடும்பப் பாங்கான கதை அம்சம் கொண்ட படங்கள் கணவன் மனைவி உறவை அதன் பெருமையை நிலை நிறுத்திய உணர்ச்சியுள்ள காட்சிகள் அமைந்த படங்களாகும்.

“வியட்நாம் வீடு” திரைப்படத்தில் முதுமையடைந்த தம்பதிகளாக... ஒரு காட்சியில் நின்னையே சரணடைந்தேன் என்பது மாதிரி பிரஸ்டீஜ் பத்மநாப ஐயர் ஆக குணச்சித்திர வேடம் ஏற்று மனைவி சாவித்திரி (பத்மினி) பாரதியின் பாடல் வரிகளான... உன் கண்ணில் நீர் வழிந்தால் - என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி என் கண்ணிற் பாவையன்றோ? - கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ... எனும் வரிகளுடன் ஆரம்பிக்கும் கவியரசு கண்ணதாசன் அவர்களுடைய ரசவாதமாக எழுதப்பெற்ற அடுத்தடுத்த சரணங்களுக்கு இதுதான் தாம்பத்திய வாழ்வின் மகிமை உச்சம் என முதியோர் காதல் உணர்வுகளை பிழிந்தெடுத்து வெளிக்கொணர்ந்து மனைவியை உள்ளூர நேசிக்கும் கணவன் மார்களை கண்கள் கலங்க வைத்த நடிகர்திலகம் நமது தலைமுறையின் பண்பாடு சொல்லிய மேதை அன்றோ!



திருமதி. கே. ஆர். விஜயா உடன்“தங்கப்பதக்கம்” உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ள சிவாஜி அவர்கள் “தங்கப்பதக்கம்“ படத்தில் பொறுப்புள்ள போலீஸ் அதி-காரியாகவும் அதே நேரத்தில் “சோதனை மேல் சோதனை போதுமடா சாமி” என மனைவ-ியை இழந்து பிரிவுத்துயர் ஆற்றாது அவலச் சுவை-யுடன் பாடி அழும் காட்சி யாரைத்தான் அழ வைக்காது!

அதே போல “வாழ்க்கை”யில் திருமதி அம்பிகா உடனும் “இருவர் உள்ளம்” “தேனும் பாலும்” ஆகிய குடும்ப சித்திரங்களில் சரோஜாதேவி அவர்களுடனும் “பொம்மை கல்யாணம்” “நிச்சயதாம்பூலம்” ஆகிய படங்களில் கணவன் மனைவிக்கிடையில் பிணக்கு ஏற்பட்டு பிரிந்து இருந்து விவாகரத்துக்குப் போகாமல் மீண்டும் நாயகி திருமதி ஜமுனா உடன் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து வாழ்க்கையை வெற்றி கொள்ளும் காட்சிகள் இவ் வாழ்வின் மேன்மையை எடுத்துச் சொல்லி தமிழர் தம் குடும்ப உறவில் வல்லுநர்களாக நிலைநிறுத்திய நாயகன் நமது சிவாஜி அவர்களை என்றால் மிகையாகாது.

*- காட்சி விரியும் வீணை மைந்தன்*

# யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது, தேர்தல் காலத்து வன்முறைகள்:

## அதிர்ச்சியில் யாழ். மாவட்ட செயலகம்

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உள்ள யாழ்.தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் (மாவட்ட செயலகம்) முன்பாக, இனம் தெரியாத நபர்களினால் உத்தியோகஸ்தர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தை சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஸ் எனும் சுற்றுச்சூழல் அதிகார சபை பிரிவில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் அவரது மோட்டர் சைக்கிளும் சேதமாக்கப்பட்டுள்ளது.

குறித்த உத்தியோகஸ்தர் வழமை போன்று நேற்று முன்தினம் 8ம் திகதி காலை கடமைக்காக வந்த போது, அவரை பின் தொடர்ந்து இரண்டு மோட்டார் சைக்கிள் வந்த நால்வர், மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வழி மறித்து அவர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் கையில் வாள் வெட்டு காயத்துக்கு இலக்கான உத்தியோகஸ்தர் பாதுகாப்பு தேடி மாவட்ட செயலகத்துக்குள் ஓடியுள்ளார்.

அதன் போதும், இருவர் அவரை பின் தொடர்ந்து மாவட்ட செயலக வளாகத்தினுள் புகுந்தும் தாக்குதலை மேற்கொண்டதுடன் , வெளியில் வந்து , அவரது மோட்டார் சைக்கிள் மீதும் தாக்குல் மேற்கொண்டு அதனை சேதமாக்கி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான உத்தியோகஸ்தர், யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு மாவட்ட செயலகத்தில் , தெரிவத்தாட்சி அலுவலகமும் செயற்பட்டு வருகின்றது. வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து மாவட்ட செயலகம் தெரிவத்தாட்சி அலுவலகம் எனும் ரீதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு இருந்தது. இந்த நிலையிலையே பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உள்ள மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வன்முறை கும்பல் மோட்டர் சைக்கிள் வந்து வாள் வெட்டு தாக்குதலை நடாத்தி விட்டு தப்பி சென்றுள்ளது.

தற்போது யாழ்ப்பாண பொலிஸார் , மாவட்ட செயலக கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். எனினும் இந்த மோசமான தாக்குதலுக்கு பின்னணியில் இராணுவம் அல்லது பொலிசாரின் ஆதரவு இருக்க வேண்டும் என்றும் அல்லது அரசின் ஆதரவு கூட இருக்கலாம் என்று இடதுசாரிக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர் எமது செய்தியாளருக்குத் தெரிவித்துள்ளார்.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

மலேசிய மடல்:

# மலேசிய அரசியல் நிலையற்ற தன்மையை நோக்கி விரைவாக நகர்கிறது



நக்கீரன்

கோலாலம்பூர், ஜூலை 09:

உலக அரசியல் அரங்கில் அரசியல் நிலைத்தன்மைக்குப் பெயர் பெற்று விளங்கிய திருநாடு மலேசியா.

மலேசிய மக்கள், பல இனத்தவராக இருந்தாலும், பன்மொழிகளை பேசுவோராக விளங்கினாலும், பல சமயங்களைச் சார்ந்தவர்களாக வாழ்ந்தாலும், பண்பாடு-கலை-கலாச்சாரக் கூறுகளால் வேறுபட்டிருந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநாட்டும் உன்னதத்தைப் பெற்று கூட்டு சமுதாயமாக வாழ்கின்றனர்.

சில வேளைகளில், ஒரு சில தலைவர்கள் தங்களின் அரசியல் ஆதாயம் கருதியும் தன்னலத்தை முன்னிறுத்தியும் முரண்பாடான கருத்துகளை வெளிப்படுத்தினாலும்கூட, மக்களோ தாங்கள் கொண்ட திண்ணிய எண்ணத்தில் இருந்தும் நாகரிக மேம்பாட்டில் இருந்தும் நல்லிணக்க மேன்மையில் இருந்தும் குறிப்பாக சமய சகிப்புத்தன்மையிலிருந்து கிஞ்சிற்றும் வழுவாமல் ஒருமைப்பாட்டையும் ஓர்மையையும் உயர்த்திப் பிடிக்கும் பண்பினராக காலம் காலமாக விளங்கி வருகின்றனர். இதனாற்றான், நாடு அமைதிப் பூங்காவாக காட்சி தருகிறது.

இதன்பொருட்டு, ஒருசில முன்னோடித் தலைவர்கள் அரும்பாடாற்றி இருக்கின்றனர் என்பதும் உண்மைதான். இதனால்தான் சமூக வேறுமாடு, சமய மாறுபாடு போன்ற எவ்வித முறுகல் நிலையையும் அறியாமல் திகழ்கிறது இந்த மண்.

இத்துடன், அரசியல் நிலைத்தன்மையும் இணைந்து அணிவகுத்துக் கொண்டதால், அந்நிய முதலீடு, பன்னாட்டு சுற்றுப் பயணியர் வருகை யாவும் ஆண்டுக்காண்டு அதிகரித்து வந்ததுடன் வெளிநாட்டினர் "இரண்டாவது இல்லம்" என்ற திட்டத்தின்வழி மலேசியாவில் வீடு வாங்குவது, வெளிநாட்டினர் மருத்துவ சுற்றுலா மேற்கொள்வது, உயர்க்கல்வி நிலையங்களில் வெளிநாட்டு மாணவர்கள் குவிந்ததெல்லாம் தொடர்ந்தன.

ஆனால், தற்பொழுதோ அரசியல் நிலைத்தன்மை என்னும் பெருமையை இழந்து நிற்பதுடன், நாளுக்கு நாள் பொழுதுக்கு பொழுது அதிரடி அரசியலை நோக்கி விரைவாக நகர்கிறது இந்த மலை நாடு.

இதற்கு சரியான சான்று, கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரதமர் ஆவார் என்று மகவும் எதிர்பார்க்கப்பட்ட டத்தோஸ்ரீ அன்வார் இன்னமும் அந்த நிலையை எட்ட முடியவில்லை.

உள்நாட்டில் மட்டுமல்ல அண்டை நாடான சிங்கப்பூர், அரபு உலகம் உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளுடன் அமெரிக்காகூட புத்தாயிரத்தாம் ஆண்டு பிறக்கும் வேளையில் மலேசியாவை அன்வார்தான் வழிநடத்துவார் என்று எதிர்பார்த்தன.

அனால், அது நடைபெறவில்லை இன்றுவரை. அதேவேளை, ஒருவரும் ஒரு பொழுதும் எண்ணிப்பாராத வகையில் ஒரே நாளில் பிரதமராகி அதிரடி படைத்துள்ளார் இன்றைய பிரதமர் டான்ஸ்ரீ முகைதின் யாசின்.

இதற்கெல்லாம் மூல காரணம், கட்சிகளின் அரசியல் சதிரடிதான்.

தேசிய அரசியலில் ஈடுபட்டுள்ள தலைவர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டு நலனிலும் மக்களின் முன்னேற்றத்திலும் அக்கறை செலுத்துவதற்கு மாறாக தத்தம் நலனிலும் தான் சார்ந்துள்ள கட்சிக்கான மறைமுக நடவடிக்கையிலும் மனங்கூசாமல் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு வகையில், இந்த நிலைக்கு அச்சாரமாகவும் ஆணி வேராகவும் இருப்பவர் மேநாள் பிரதமர் துன் டாக்டர் மகாதீர் முகமதுதான்.

இதனால்தான், கடந்த 2018 மே 9-ஆம் நாளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 14-ஆவது நாடாளுமன்றம், ஈராண்டுகளை நிறைவு செய்வதற்குள்ளாகவே மறு தேர்தல் குறித்த பேச்சும் அறைகூவலும் எழுந்தன.

நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இடைவிடாமல் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக மலாயர் தேசியக் கட்சியான அம்னோ தலைமையிலான கூட்டணியே நாட்டை ஆண்டு வந்த நிலையில், இந்த உலக சரித்திர சாதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வைக்கும் வகையில் 2018 பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது.

அந்த நேரத்தில் எதிரணித் தலைவரான டத்தோஸ்ரீ அன்வார் சிறையில் இருந்ததால், 93 வயதான மகாதீர் எதிரணிக்கு தற்காலிக தலைவரானதுடன் பிரதமராகவும் ஆனார்.

இதில் விந்தை என்னவென்றால், இதே மகாதீர் முன்னர் ஆளும் அணியாக இருந்த தேசிய முன்னணி சார்பில் 22 ஆண்டுகள் பிரதமராக இருந்தவர். ஈராண்டுகளுக்கு முன் எதிரணி ஆளும் அணியாக மாறியபோதும் பிரதமராகி 22 மாதங்கள் பிரதமராக இருந்தார்.

ஆனால், தேர்தல் காலத்தில் நாட்டு மக்களிடமும் கூட்டணித் தலைவர்களிடம் அளித்த வாக்குறுதிப்படி நடந்து கொள்ளாமல், கால் நூற்றாண்டுக்கு முன் அன்வார் இப்ராகிம்மீது கொண்ட அரசியல் வஞ்சத்தை இன்னமும் மனதிற்கொண்டு, அரசியல் வஞ்சத்தை தனிமனித வஞ்சமாக மாற்றி, வார்த்தை மாறி நடந்து கொண்டார் வாக்கை மீறி செயல்பட்டார்.

முன்னுக்குப் பின் முரணாகிப் பேசி, கடைசியில் பதவி விலகல் நாடகம் நடத்தி, அந்த நாடகத்தில் இவரே பலியானார்.

கூட்டணியில் குழப்பம் விளைவித்ததுடன், பதவி விலகிய நேரத்தில் ஒருவேளை அன்வார் பிரதமர் ஆகிவிடக்கூடும் என்ற எண்ணத்தில் தன்னுடைய கட்சியை அந்த அணியை விட்டு வெளியேறும்படி செய்து, கூட்டணியின் பெரும்பான்மைக்கு பங்கம் ஏற்படுத்தினார். போதாக் குறைக்கு பிரதமர் பதவிக்குரிய செல்வாக்கைப் பயன்படுத்தி அன்வாரின் கட்சியையும் சேதப்படுத்தினார்.

தான் தீட்டிய சதித்திட்டம் நிறைவேறாமல் போனதுடன், அது வேறொரு கட்டத்தை எட்டியது. இருந்தபோதும், மகாதீருக்கு மனநிறைவான ஒரே விடயம், அன்வார் பிரதமர் ஆகாமல் செய்து விட்டோமே என்பதுதான்.

இப்போது, இனியும் அன்வாருக்கு வாய்ப்பு அமைந்துவிடக் கூடாதென்ற எண்ணத்தில் அன்வார் இருக்கும் அணியிலேயே நீடித்துக் கொண்டு நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மூலம் இப்போதைய ஆட்சியை கவிழ்த்துவிட்டு மீண்டும் நம்பிக்கைக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றினால் தான் இன்னும் ஆறு மாத காலத்திற்கு பிரதமராக இருக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்.

22 ஆண்டுகளும் 22 மாதங்களும் போதவில்லையாம். இன்னும் ஆறு மாதத்திற்கு பிரதமர் பதவி வேண்டுமாம். இதில் வேடிக்கையும் விநோதமும் என்னவென்றால், 56 வயதில் பிரதமராகி, மீண்டும் 93 வயதில் பிரதமராகி, தற்பொழுது 95 வயதில் மூன்றாவது முறையாக பிரதமராக ஆசைப்படும் இவர், வரும் ஆகஸ்ட் மாதம் 10-ஆம் நாள் 73 வயதை எட்ட இருக்கும் அன்வாரைப் பார்த்து பிரதமர் பதவிக்கு அலைகிறார் என்பதுதான்.

ஆளுந்தரப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள், கடந்த பொதுத் தேர்தலில் மலேசிய வாக்காளர்களால் புறக்கணிக்கப்பட்டவர்களுடன் அணி சேர்ந்து அமைக்கப்பட்ட ஆட்சியை மக்கள் பின்புற ஆட்சி என்றும் கொல்லைப்புற ஆட்சி என்றும் கருதுகின்றனர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத இன்றைய ஆட்சியில் இடம்பெற்றுள்ள பல தளங்கலைச் சேர்ந்த அரசியல் கட்சிகளுக்கு ஆட்சி அதிகாரம் இருந்தாலும் முட்டலும் மோதலும் தொடர்கின்ற நிலையில், ஒருவருக்கு ஒருவர் அழுத்தம் கொடுப்பதை தாங்கமாட்டாமல் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தல் நடத்தலாமா என்ற கோணத்தில் ஆளுந்தரப்புக் கட்சிகள் அனைத்தும் காய் நகர்த்துகின்றன.

இதன் வெளிப்பாடுதான், பொதுத் தேர்தல் முடிந்து இரண்டு ஆண்டுகள், இரு மாதங்கள் மட்டும் இன்றோடு முடிகின்ற இந்த வேளையில் மலேசிய அரசியல் களம், அடுத்த பொது தேர்தலை நோக்கி வேகவேகமாக நகர்கிறது.

இதற்கெல்லாம் ஒரேக் காரணம், நாளை ஜூலை 10-ஆம் நாள் 96-ஆம் அகவையை எட்டும் துன் மகாதீர்தான்.

நம்பிக்கைக் கூயட்டணி மூலம் மாற்றத்தை விரும்பி மக்கள் நம்பிக்கையோடு வாக்களித்து புத்தாட்சியை தோற்றுவித்தனர். ஆனால், மக்கள் கொண்ட நம்பிக்கையையும் சிதைத்து, நம்பிக்கைக் கூட்டணியையும் குலைத்து, மலேசிய அரசியலின் நிலைத்தன்மையையும் கலைத்த ஒற்றை மனிதராக மகாதீர் திகழ்கிறார்.

அப்படியானால், மற்ற தரப்பினர் பரிசுத்தவான்களா என்றால் நிச்சயமாக அதுவும் இல்லை.

கடந்த பிப்ரவரி மாதம் வரை நாட்டை ஆண்ட நம்பிக்கைக் கூட்டணியில் மகாதீர் எப்போது பதவி விலகி, அன்வாருக்கு வழி விடுவார் என்ற சர்ச்சை எழுந்த போதெல்லாம், இந்தத் தவணை முழுவதும் (ஐந்து ஆண்டுகளுக்கு) மகாதீரே பிரதமராக நிடிக்க ஆதரவு அளிப்பதாக எதிரணியைச் சேர்ந்த அம்னோ கட்சியும் அதற்கு வால் பிடித்துக் கொண்டிருக்கும் பாஸ் கட்சியும் மாறி மாறி அறிக்கை விட்டது, கணவன்-மனைவிக்கு இடையே எழுந்த பிரச்சனையில் அடுத்த வீட்டுக்காரன் தலையிட்டதைப் போன்றது.

அதேவேளை, இந்த இரு தரப்பினரையும் நம்பி, மகாதீர் பதவி விலகல் நாடகத்தை அரங்கேற்றிவிட்டு, மீண்டும் அரசியல் கலப்பின்றி தேசிய அரசாங்கத்தை அமைக்க விரும்புவதாக மாமன்னரிடம் கோரிக்கை வைத்தபோது அம்னோவும் பாஸ் கட்சியும் நாங்கள் இனி மகாதீருக்கு ஆதரவு அளிக்க மாட்டோம் என்றனர்.

அத்துடன், இனி பொதுத்தேர்தல்தான் நடத்தியாக வேண்டும் என்றனர். பிறகு அணி மாறி வந்தவர்களுடன் சேர்ந்து கொல்லைக்ப்புற ஆட்சியை அமைத்துக் கொண்டுள்ளனர் இப்போது.

அன்வாரிடம் இருந்து பிரிந்து சென்ற டத்தோஸ்ரீ அஸ்மின் அலி தரப்பினரும் இந்தக் கோளாறுகளுக்கு ஒரு முக்கியக் காரணம். அதைவிட, நாட்டின் மூன்றாவது பிரதமர் துன் உசேன் ஓனின் மகனும் அம்னோ கட்சியைச் சேர்ந்தவரும் இன்றைய கொல்லைப்புற ஆட்சியில் பாதுகாப்புத் துறை அமைச்சருமான டத்தோஸ்ரீ ஹிஷாமுடின் குதிரை பேரத்தில் ஈடுபட்டது அப்பட்டமான அரசியல் தகிடுதத்தம்.

மொத்தத்தில் ஜனநாயகக் கட்டமைப்பின் எஜமானர்கள் என்று கருதப்படும் பொதுமக்களோ வாய் பிளந்து நிற்கின்றனர்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# கூட்டமைப்பை வெளியேற்றுவதே சர்வதேச விசாரணைக்கான சாவியாக அமையும் என்கிறார்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை வெளியேற்றுவதே சர்வதேச விசாரணைக்கான சாவியாக அமையும் என வவுனியாவில் சுழற்சிமுறையில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கடந்த ஆயிரத்து 236ஆவது நாளாக போராட்டம் மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுத்த போராட்டத்தைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் கூறுகையில், "புதிய அரசியல் சாசனத்தை, அதாவது அடிமை சாசனத்தை கொண்டு வருவதற்காகவே தமிழர்களை பலவீனப்படுத்தி அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் கொழும்பின் நிகழ்ச்சி நிரலை சிந்திக்கவிடாமல் தமிழ் வாக்காளர்களை அடிமையாக வைத்திருந்ததாக கூட்டமைப்பு பெருமை கொள்கின்றது.

தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலையை நிராகரித்த சம்பந்தன், சுமந்திரன் குழுவினர்களை மக்கள் நிச்சயம் நிராகரிப்பார்கள்.

கூட்டமைப்பை வெளியேற்றுவதே சர்வதேச விசாரணைக்கான சாவியாக அமையும். இதை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நிறைவேற்ற வேண்டும்" என்று தெரிவித்தனர்.

# மனிதருக்கு பயன்படுத்தவென பரிசோதனை நிலையில் 11 தடுப்பூசிகள்: 2020ம் ஆண்டு இறுதி வரையாவது மக்கள் காத்திருக்கவேண்டுமா?

கோவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிரான "உலகப்போர்" அதிதீவிரமாக நடைபெற்று வருகிறது. கண்ணுக்குத்தெரியாத எதிரியை எப்படித் தாக்க முடியும்? முடியாது! அப்படியானால் எப்படித்தான் எதிரியைத் தாக்கி அழிப்பது? ஒன்று எதிரியிடம் சிக்காமல் தற்பாதுகாப்புடன் இருக்கவேண்டும். மீறி, அந்த எதிரி மனித உடலில் ஊடுருவினால் எதிர்ப்பாற்றலின் மூலம் மட்டுமே அதை அழிக்கமுடியும். அதற்கு ஏற்ப, மனித உடலில் "ஆன்டிபாடிஸ்" எனப்படும் எதிர்ப்பாற்றலை உருவாக்கும் தடுப்பூசி கண்டுபிடிக்கும் அயராத முயற்சியில் உலகம் முழுவதும் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.

### "ஹெர்டு இம்யூனிட்டி"

இதற்கு மத்தியில் "ஹெர்டு இம்யூனிட்டி" (Herd immunity) எனப்படும் முறையின் மூலம் மனிதர்களுக்கு பரவலாக வைரஸ் பரவ அனுமதித்து, அதன்மூலம் "கொரோனா எதிர்ப்பு சக்தி" உடைய மனிதர்களை பெருகச்செய்து, வைரஸ் பரவல் வேகத்தை கட்டுக்குள் கொண்டு வர முடியுமா என்ற ஆராய்ச்சியும் ஸ்பெயினில் நடைபெற்றது. இந்த பரிசோதனைக்கு 61 ஆயிரம் பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு கொரோனா எதிர்ப்பு ஆற்றல் எந்த அளவு உருவாகிறது என்பது கண்காணிக்கப்பட்டது.

ஆனால் இதில் சுமார் 3,100 பேருக்கு மட்டுமே நோயை எதிர்க்கும் 'ஆன்டிபாடிஸ்' உருவாகி இருந்தது. இது வெறும் 5 சதவீதம் மட்டுமே. எனவே, ஹெர்டு இம்யூனிட்டி மூலம் கொரோனாவை கட்டுப்படுத்துவது சிரமம் மட்டுமல்ல் ஆபத்தானதும் கூட என்ற முடிவுக்கு ஸ்பெயின் விஞ்ஞானிகள் வந்துள்ளனர்.

இந்நிலையில், தடுப்பூசி மட்டுமே கொரோனா பரவலுக்குத் தீர்வு என்பதால் அது தொடர்பான ஆராய்ச்சிகளும், பரிசோதனைகளும் வேகம் எடுத்துள்ளன.

### தடுப்பூசி கண்டுபிடித்த நாடுகள்

இதன் பலனாக, இங்கிலாந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் ஜென்னர் இன்ஸ்டிடியூட் ஏ. இசட். டி. (AZD) 1222 என்ற தடுப்பூசியை உருவாக்கியுள்ளது.

அதற்கு அடுத்தபடியாக வாஷிங்டனின் சுகாதார ஆராய்ச்சி நிறுவனம் எம். ஆர்.என்.ஏ. (MRNA)-1273 என்ற தடுப்பூசியை உருவாக்கியுள்ளது.

கொரோனாவின் பிறப்பிடமான சீனாவிலும் தடுப்பு மருந்து கண்டறியப்பட்டு ராணுவத்தினரிடம் பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று, இந்தியாவிலும் கொரோனா தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோவாக்சின் (Covaxin), ஸைகோவ்-டி (zycov-D) ஆகிய அந்த இரண்டு மருந்துகளும் மனிதர்களிடம் சோதனை செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு தடுப்பு மருந்துகளும் "கொரோனாவை முடிவுக்குக் கொண்டு வரும் தொடக்கமாக இருக்கும்" என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுபற்றி, மத்திய அறிவியல், தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவல்கள் வருமாறு:

"உலக நாடுகளைப் போலவே இந்திய நிறுவனங்களும் கொரோனா தடுப்பூசிகளை உருவாக்கும் ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், புனேயில் உள்ள நே'னல் இன்ஸ்டிடியூட் ஆப் வைராலஜி, சி.எஸ்.ஐ.ஆர் போன்ற இந்தியாவின் நிறுவனங்கள் இணைந்து கொரோனாவுக்கான தடுப்பூசியை உருவாக்கி வருகின்றன. இதுவரை உலக அளவில் தயாரிக்கப்பட்டு வரும் 140 தடுப்பூசிகளில் 11 தடுப்பூசிகள் மனித பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கோவாக்சின், ஸைகோவ்-டி ஆகிய இரண்டு மருந்துகளும் அடங்கும்.

இந்தத்தடுப்பூசிகளை மனிதர்களுக்கு செலுத்திப் பரிசோதிக்கும் முதல் இரண்டு கட்ட சோதனைக்கு மத்திய மருந்து கட்டுப்பாட்டுத்துறை அனுமதி வழங்கியுள்ளது. அதேநேரத்தில் 3-ம் கட்ட சோதனையும் அவசியம்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் ஜென்னர் இன்ஸ்டிடியூட்டும், வாஷிங்டனின் சுகாதார ஆராய்ச்சி நிறுவனமும் இருவேறு தடுப்பூசிகளை உருவாக்கியுள்ளன.

இந்த இரு நிறுவனங்களும் இந்தியாவுடன் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ளன.

தடுப்பூசி உற்பத்தியில், இந்தியா குறிப்பிடத்தக்க மையங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

யுனிசெப் நிறுவனத்துக்கு வழங்கப்படும் தடுப்பூசி விநியோகத்தில் இந்தியா 60 சதவீத பங்கு வகுக்கிறது. உலகில் எங்கு வேண்டுமானாலும் கொரோனாவுக்கான தடுப்பு மருந்து தயாரிக்கப்படலாம்.

ஆனால், இந்தியத் தயாரிப்பாளர்களின் துணை இல்லாமல் அவை தேவையான அளவைத் தயாரிப்பது சாத்தியமில்லை."

இவ்வாறு மத்திய அரசு தகவல் வெளியிட்டுள்ளது.

### 6 மாதமாவது தேவை

இதற்கிடையே, தடுப்பூசி சோதனைகளை முடிக்க குறைந்தது 6 முதல் 9 மாதங்கள் தேவை என்று, உலக சுகாதார நிறுவன (WHO) தலைமை அறிவியல் நிபுணர் சவுமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இந்திய நிறுவனங்கள் தயாரித்துள்ள கோவிட்-19 தடுப்பூசி குறித்து அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் வருமாறு:

"வாக்சின் ஒன்றுக்கான முதல் மூன்று கட்ட சோதனைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற 6 முதல் 9 மாதங்கள் ஆகும். இந்தியாவை சேர்ந்த 7 கம்பெனிகள் கொரோனா வைரஸ் வாக்சின் தயாரித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது உண்மையில் ஊக்கம் அளிக்கும் செய்தியாகும். இந்த ஏழு கம்பெனிகள் தயாரிக்கும் வாக்சின்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அவை அனைத்தும் மூன்று கட்ட சோதனைகளுக்கு முறையாக உட்படுத்தப்பட வேண்டும். இந்த மூன்று கட்ட சோதனைகளின் முடிவுகள் வெளியாகும் வரை நம்மால் இந்த வாக்சின்கள் குறித்து எந்த கருத்தையும் தெரிவிக்க இயலாது. அதே நேரத்தில் சோதனைகளுக்குப் பிறகு இந்த வாக்சின்களை பெருமளவில் உற்பத்தி செய்யவும் கால அவகாசம் தேவைப்படும்.

அதற்கு முன், மருத்துவ நெறிமுறைகளுக்கு உட்பட்டு கண்டறிவதும், கிளினிக்கல் டிரையலின் மூன்றாம் நிலையில் 20,000 முதல் 30,000 பேரை ஈடுபடுத்துவதும் முக்கியம்."

இவ்வாறு கருத்து வெளியிட்டார், சவுமியா.

### உற்பத்தி தொடக்கம்

இந்நிலையில், இந்தியாவில் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை உள்ளிட்ட 12 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கோவாக்சின் தடுப்பூசி மனிதர்களுக்குச் செலுத்திப் பரிசோதிக்கப்பட உள்ளது.

இந்த ஆய்வு நிறைவடைவதற்கு முன்னரே தடுப்பூசி தயாரிக்கும் பணிகளையும் தொடங்கிவிட்டது, இந்தியாவின் பாரத் பயோடெக் நிறுவனம். காரணம், ஆய்வு வெற்றிகரமாக முடியும்பட்சத்தில் தாமதமில்லாமல், பற்றாக்குறை ஏற்படாமல் தடுப்பூசி விநியோகத்தைத் தொடங்க முடியும் என்பதால் அவ்வாறு செயல்படுகிறது.




எனினும், தடுப்பூசி, வருகிற சுதந்திர தினத்தன்றே (ஆக. 15) பயன்பாட்டுக்கு வந்து விடும் என்று தகவல்கள் பரவிய நிலையில், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் (ஐசிஎம்ஆர்) அளித்திருக்கும் விளக்கம் பின்வருமாறு:

"கோவிட்-19 தடுப்பு மருந்து தொடர்பான கிளினிக்கல் டிரையல் முடிவுகள் மட்டுமே சுதந்திர தினத்தன்று வெளியாகும். இரண்டு படிநிலை ஆய்வு முடிவுகள் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வருவதற்குக் கூடுதல் நாட்கள் ஆகும். பரிசோதனைகள் வெற்றியடைந்தால் 2021-ம் ஆண்டு தொடக்கத்தில் தடுப்பூசி பயன்பாட்டுக்கு வரும்."

இவ்வாறு ஐ.சி.எம்.ஆர். தெரிவித்துள்ளது.

இவ்வாறு அடுத்தடுத்து வெளியாகும் தகவல்களைப் பார்க்கும்போது, இந்த ஆண்டு இறுதி வரையாவது தடுப்பூசிக்கு மக்கள் காத்திருக்கவேண்டும் என்றே தோன்றுகிறது.

*--ரா.மணி,*
*திருநெல்வேலி.*

# நல்லூர்க் கந்தனுக்கு வந்த 'சோதனை'



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நல்லூர் கந்தசுவாமி கோயில் சிங்கள இளவரசரான சபுமல் குமார என்பவராலேயே கட்டப்பட்டதாக தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுர காலத்தில் கட்டப்பட்ட கோகண்ண விகாரை மீதே திருகோணமலை, திருக்கோணேச்சர ஆலயம் கட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்த அவர், இவற்றுக்கான ஆதாரம் தம்மிடம் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

என்றபோதும் தாம் வரலாற்றுப் புகழ்மிக்க தமிழர்களின் ஆலயங்களை உரிமை கோரமாட்டோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகள் தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட செயலணி குறித்து தமிழ், முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் செயலணியின் நோக்கம் மக்கள் மத்தியில் முரண்பாடுகளை தோற்றுவிப்பது அல்லவென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சிதைவடைந்துள்ள தொல்பொருள் மரபுரிமையினை அடையாளப்படுத்தி அதனை பாதுகாப்பதே தமது பிரதான நோக்கம் என்றும் பௌத்த மத மரபுரிமைகளை மட்டுமன்றி பிற இனங்களின் மதம் தொடர்பான உரிமைகளும் செயலணியின் ஊடாக பாதுகாக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, ஆய்வு நடவடிக்கைகளின்போது கிடைக்கப்பெறும் தரவுகளைக் கொண்டு அறிவிக்கப்படும் செய்திகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்துள்ள மேதானந்த தேரர், வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலையில் அமைந்துள்ள திருகோணேச்சரம் கோகண்ண விகாரையின் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளமைக்கான தொல்பொருள் சான்றாதாரங்கள் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கேயரின் படையெடுப்பினால் அந்த விகாரை அழிக்கப்பட்டது என்றும் பிற்பட்ட காலத்தில் அவ்விடத்தில் திருகோணேச்சரம் ஆலயம் கட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளதுடன் தற்போது இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் உண்மையை அறிந்துகொள்வது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனைவிட, கோட்டை இராசதானி காலத்தில் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயில் சிங்கள இளவரசரான சபுமல் குமார என்பவரால் கட்டப்பட்டது என்பதையும் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக தாங்கள் நல்லூர் ஆலயத்தை உரிமை கோரவில்லை எனவும் இந்து மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது இரு தரப்பு மத வழிபாடுகள் மற்றும் கட்டடக்கலை ஊடாக உறுதியாகின்றன என்றும் எல்லாவெல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# ஈழத்துத் திருக்கோவில்கள்



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில்
### – மட்டக்களப்பு –

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டதோடு பல இலட்சம் மக்கள் தமது இன்னுயிர்களை நீத்த நிலையில், அஞ்சி அஞ்சி வாழும் நிலை காணப்படுகின்றது. செய்வதறியாது அரசுகள் மக்களைக் காப்பாற்ற, பல்வேறு வழிகளைக் கையாள்கின்றன. கனடாவில் வதியும் மக்கள் அரசின் வழிகாட்டல்களை ஏற்று, பெருமளவு பாதிப்புக்களிலிருந்து தப்பி வாழ்கின்றனர். கனடிய அரசிற்கு அனைவரும் தலைவணங்குவோம். இதேவேளை ரொறன்ரோவில் வாழும் மக்கள் ஒன்ராரியோ தலைமையும், ரொரன்ரோவின் தலைமையும் காட்டும் வழியில் பயணித்து, பேரிழப்புக்களை தவிர்த்து வாழ்கின்றனர். வழிகாட்டிகளாகிய இவர்களுக்கும் நன்றி கூறுவதோடு, தொடர்ந்தும் அன்றாடம் இவர்களால் வழங்கப்படும் நெறிமுறைகளையும் ஏற்று வாழ்வது அனைவரும் நலமே வாழ உதவும்.

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரோனா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
2. முகக் கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்
4. தேவையற்று வெளியே செல்வதைத் தவிர்த்தல்
5. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருத்தல்

இந்த ஐந்து நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரோனா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த ஐந்து நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி, அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

<u>மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்</u>
ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்''
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

**இம்மந்திரத்தை தினமும் ஓதுவதோடு நாமும் நலமடைந்து, உலகமக்களும் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இவ்வாறான பிரார்த்தனைகளால் பலனும் நலமும் பெற்றவர்கள் பலர்.**

இலங்கை இந்தியா உட்பட உலகெங்குமுள்ள பல நாடுகளிலும் சக்தி வழிபாடு பிரசித்திபெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. பல பிரசித்திபெற்ற சக்தி ஆலயங்கள் தான்தோன்றியாக அமைந்து அருட்சக்தியை அள்ளிக் கொடுப்பனவாக அமைந்துள்ளன. இந்துமதத்தின் ஒரு பிரிவாகச் சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் மதமாகச் சாக்தம் காணப்பட்டபோதிலும், தற்காலத்தில் சாக்தம் என்ற பிரிவு தனித்துவம் பெற்றதாகக் காணப்படவில்லை. எட்டாம் நூற்றாண்டிலே வாழ்ந்த ஸ்ரீ சங்கரபகவத்பாதர் அறிமுகப்படுத்திய அறுவகை வழிபாட்டில் ஒன்றாகச் சாக்தம் திகழ்ந்தது.

ஈழத்திலே சக்தி அருள்பிரவாகமெடுக்கும் பல சக்தி வழிபாட்டுத்தலங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் நயினை நாகபூசணி அம்பாள், தெல்லிப்பளை துர்க்கை அம்பாள், திருகோணமலை பத்திரகாளி அம்பாள், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள், யபழ்ப்பாணம் வீரமாகாளி அம்பாள், புளியங்கூடல் மகாமாரி அம்பாள், சீரணி நாகம்பாள் போன்ற பல அன்னையின் அருட்பிரவாகம் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. இவ்வாறே ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பல சக்தி வழிபாட்டுத்தலங்களை அமைத்து வழிபாடியற்றி வருகின்றனர். ரொற்னரோ துர்க்காபுரத்திலுள்ள ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம், டென்மார்க் பிராண்டா பதியிலுள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயம் போன்றவை பல்வேறினத்தவர்களையும் தன்பால் ஈர்த்து, தமிழர்களின் கலை, கலாச்சார வளர்ச்சிக்கு உதவி உடல், உள ரீதியான துன்பங்களைப்போக்கி அருள்பாலிக்கும், அருள்ஈர்ப்புக் கொண்ட சக்தி தலங்களாகப் போற்றப்படுகின்றன.

இலங்கையின் தலைநகராக விளங்குகின்ற கொழும்பிலும் பல சக்தி வழிபாட்டுத் தலங்கள் அருட்சக்தி கொண்டவையாக விளங்குகின்றன. இந்துசமயத்தைச் சார்ந்தோர் மட்டுமன்றி ஏனைய மதங்களைச் சேர்ந்தோரும் இப்பிரதேசத்திலுள்ள அன்னை வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வணங்குவது பண்டுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. இந்த வகையிலே கொழும்பு வெள்ளவத்தையில் மயூரபதி என்றழைக்கப்படும் பகுதியில் அருளாட்சி புரிந்துவரும் மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் சகல இன மக்களிடையேயும் மிகப் பிரபல்யம் பெற்ற ஆலயமாகக் காணப்படுகின்றது.

*வளரும்...*

# இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

3

நக்கீரன் -கனடா

ஸ்ரீலங்கா ஒரு பவுத்த நாடு. தேவநம்பிய தீசன் (கிமு 247 - 207) ஆட்சிக் காலம் தொடக்கம் பவுத்தம் இலங்கைத் தீவில் பெரும்பான்மை மக்களது மதமாக இருந்து வருகிறது.

சிங்கள தேசியத்தின் அடையாளம் பவுத்த மதமாகும். சிங்கள தேசியத்தின் பிரிக்கமுடியாத அம்சமாக பவுத்த மதம் இன்று திகழ்கிறது. சிங்கள அடையாளத்தின் வடிவம், வரலாறு, சமூக உளவியல் என அனைத்துமே ஏதோ ஒருவகையில் இலங்கையின் தேரவாத பவுத்தத்தோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. இன்று பவுத்த தேரர்களும் அவர்களுடைய பீடங்களும் இல்லாத ஒரு சிங்கள சமூகத்தை நாம் கற்பனைசெய்து கூடப் பார்க்க முடியாது. அவ்வளவு தூரம் சிங்கள இன அடையாளமும் பவுத்த மத உணர்வும் கை கோர்த்து நிற்கின்றது எனலாம். இன்றைய சிங்கள - பவுத்த இனவாதிகள் சிறிலங்கா சிங்கள - பவுத்தர்களுக்கு மட்டும் சொந்தமான நாடு என தீவிர பவுத்த தேரர்களும் தீவிர சிங்கள – பவுத்த அரசியல்வாதிகளும் பகிரங்கமாகக் கூறிவருகிறார்கள். அதை எண்பிக்கும் வண்ணம் சனாதிபதி தேர்தலில் முதல்முறையா சிங்கள - பவுத்தர்களது வாக்குகளால் அறுதிப் பெரும்பான்மை பெற்று கோட்டாபய இராசபக்ச வென்றிருக்கிறார். இதனைத் தொடர்ந்து நாடு சிங்கள - பவுத்த மயப்படுத்தல் வேகம் பிடித்துள்ளது. தமிழ்த் தேசிய கீதத்துக்குத் தடை, வடக்கில் இராணுவக் குவிப்பு, கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் அடையாளங்களைப் பாதுகாக்க சிங்கள-பவுத்தர்கள் மட்டும் கொண்ட செயலணி போன்றவை நல்ல எடுத்துக் காட்டுகளாகும்.

மகாவம்ச சிந்தனையில் ஊறிப் போன சிங்களவர்கள் தங்களை ஆரியர் என்றும் தாங்களே இலங்கையின் மூத்த குடியென்றும் தங்களுக்கே நாடு சொந்தம் என்றும் பவுத்த தர்மத்தைக் காப்பாற்றிப் பேணுவதற்குரிய இடமாக இலங்கைத் தீவு புத்தரால் ஆசிர்வதிக்கப்பட்டது என்றும் நம்புகிறார்கள். மேலும் பவுத்த - சிங்கள அரசியல் மேலாண்மைக்கும் சிங்கள தேசத்தின் இருப்பிற்கும் தமிழரே பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறார்கள் எனவும் நினைக்கிறார்கள். இந்த மகாவம்ச சிந்தனையே இன்றைய இன முரண்பாட்டுக்கு அடிப்படைக் காரணம் ஆகும்.

ஆங்கிலேயர் வரும்வரை மகாவம்சம் என்பது மறக்கப்பட்டிருந்தது. 1837 இல் யோர்ஜ் ரேணர் (George Turnour) என்ற ஆங்கிலேயரே இலங்கை பொது சேவையில் (Ceylon Civil Service) இருந்த காலத்தில் மகாவம்சத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். பின்னர் 1912 இல் வில்ஹெம் கெய்க்கர் (Wilhelm Geiger) என்பவர் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். இந்த மொழி பெயர்ப்பை Mabel Hay அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அதனை வில்ஹெம் கெய்க்கர் திருத்தி அமைத்தார்.

அதன் பின்னர் 1877இல் ஆங்கில ஆளுநர் ஒருவர் மகாவம்சத்தை சிங்களத்தில் மொழிபெயர்ப்புப் செய்தான். அதன் பின்னரே அப்படி ஒரு நூல் ஒன்று இருப்பதே பெரும்பாலான சிங்களவர்க்குத் தெரியவந்தது.

மகாவம்சம் முதல் அத்தியாயத்தில் இலங்கைக்கு ததாகதர் (புத்தர்) வருகை பற்றிய கதையோடு தொடங்குகிறது. ஆறாம் அத்தியாயம் விஜயனும் அவனது 700 தோழர்களும் இலங்கைகைகு படகுகளில் வந்ததையும் (கிமு 483 - 445) அவன் முடிசூட்டிக் கொண்டதையும் விபரிக்கிறது. கடைசி அத்தியாயம் 38 அனுராதபுரத்தை ஆண்ட மகாசேனன் ஆட்சியோடு (கி.பி. 334 - 362) முடிவுறுகிறது.

இலங்கையில் பவுத்த மதம் பரவியிருந்த காலத்தில் பவுத்த விகாரைகளில் வாழ்ந்து வந்த தேரர்கள் சமய மரபுகள் குறித்தும் மன்னர்களின் ஆட்சி பற்றியும் அவர்கள் வெட்டிய குளங்கள், கட்டிய விகாரைகள் குறித்தும் ஏடுகளில் எழுதி வைத்ததோடு அவற்றை வாய்மொழி மூலமாகவும் பேணி வந்தார்கள். இப்படிக் காலம் தோறும் சேகரிக்கப்பட்ட குறிப்புக்கள் “அட்டகதா” என்று அழைக்கப்பட்டன. ஒரு கட்டத்தில் இவை ஒருங்கிணைக்கப்பட்டு ‘அட்டகதா-மகாவம்சம்’ என்று அழைக்கப்பட்டது.

அட்டகதா - மகாவம்சத்தைத் தழுவி கிபி 4 ஆம் நூற்றாண்டளவில் தீபவம்சம் என்ற நூல் எழுதப்பட்டது. தீபவம்சத்தை எழுதிய ஆசிரியர் யார் என்று அறுதியிட்டு கூறமுடியாமல் உள்ளது. காலத்திற்குக் காலம் பல பௌத்த பிக்குகளால் எழுதப்பட்ட செய்யுள்களை ஒருங்கிணைத்துத்தான் ‘தீபவம்சம்’ முழுமை பெற்றிருக்க வேண்டும்.

இந்தத் தீபவம்சம் என்கின்ற நூலை முதல் நூலாகக் கொண்டுதான் மகாநாம என்ற பவுத்த தேரர் 5 ஆம் நூற்றாண்டளவில் பாளிமொழியில் செய்யுள் வடிவில் மகாவம்சம் என்ற நூலை எழுதினார்.

இலங்கைத் தீவிற்குப் பவுத்த சமயம் வந்த வரலாறு குறித்தும் இலங்கையை ஆட்சி புரிந்த மன்னர்களது வரலாறு குறித்தும் மகாவம்சம் விபரிக்கின்றது.

இதன் இரண்டாவது பாகம் சூழவம்சம் எனப் பெயர் பெறும். இதன் முதல் பிரிவு 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தர்மகீர்த்தி என்ற பவுத்ததேரரால் எழுதப்பட்டது. மகாவம்சத்தின் கதைநாயகன் துட்ட கைமுனு என்றால் (கி.மு. 101-77) சூழவம்சத்தின் கதைநாயகன் தாதுசேனன் ஆவான். (கி.பி. 1137-1186).

இலங்கைத் தீவிற்குப் பவுத்த சமயம் வந்த வரலாறு குறித்தும் இலங்கையை ஆட்சி புரிந்த மன்னர்களது வரலாறு குறித்தும் மகாவம்சம் விபரிக்கின்றது. பவுத்தத்துக்குரிய தகைமையை மீண்டும் நிலைநாட்ட தமிழருக்கு எதிராக துட்ட கைமுனு போர்புரிந்து எல்லாள மன்னனைத் தோற்கடித்தான் என மகாவம்சம் கூறுகிறது. மகாவம்சத்தின் கதை நாயகனாக துட்ட கைமுனு (கிமு 101 - 77) வருணிக்கப்படுகிறான். மகாவம்சத்துக்கு முந்திய தீபவம்சம் துட்ட கைமுனுவின் ஆட்சியை பத்துப் பாடல்களில் பாடி முடிக்க மகாவம்சம் அதே கதையை 12 அத்தியாயங்கள் (21-32) பாடி முடிக்கிறது. அதாவது மஹா வம்சத்தின் 3∴1 பாகம் துட்டகைமுனுவின் வீர வரலாறு கூறப் படுகிறது. இதில் ஒரு தேசிய விடுதலை வீரனாக துட்டகைமுனு வர்ணிக்கப் படுகிறான்.

மகாவம்சத்தை எழுதியதன் நோக்கத்தை ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவில் நுலாசிரியர் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக ஆறாம் அத்தியாயத்தின் முடிவில் ”(பவுத்த) பக்தர்களின் அமைதியான ஆனந்தத்துக்கும் மனவெழுச்சிக்கும் தொகுக்கப்பட்ட மகாவம்சத்தின் விஜயனின் முடிசூடல் என்ற 6 ஆம் அத்தியாயம் இத்துடன் முடிவுற்றது” எனக் கூறுவார்.

எனவே மகாவம்சம் ஒரு வரலாற்று நூலல்ல. அது பவுத்த சமயத்தவரது ஆனந்தத்துக்கும் மனவெழுச்சிக்கும் தொகுக்கப்பட்ட நூல். பெரியபுராணம் 63 சைவ நாயன்மார்களது கதைகளை புகழ்ந்து பாடுவது போல் மகாவம்சம் பவுத்தசமயத்தை வளர்த்த அரசர்களது புகழைப் பாடுகிறது. இருந்தும் மகாவம்சத்தை முற்று முழுதாக இலங்கை வரலாற்றைக் கூறும் நூல் எனக் கூறமுடியாவிட்டாலும் அதனை முற்று முழுதாகப் புறக்கணித்துவிட்டு இலங்கை வரலாற்றை இனம் காணவும் முடியாது. இலங்கை வரலாற்றை ஓரளவு புரிந்து கொள்ள மகாவம்சம் ஒரு கால நூலாக விளங்குகிறது.

மகததேசத்தில் உள்ள உருவெல என்னும் இடத்திலுள்ள அரச மரத்தின் அடியில் ஒரு வைகாசி மாதத்துப் பௌர்ணமி நாளில் கவுதம புத்தர் (கிமு 560□480) அமர்ந்திருக்கின்றார். அப்போது அவருக்குச் சில நிகழ்ச்சிகள் புலனாகின்றன. பவுத்த மதம் பெரு வளர்ச்சியடையக் கூடிய இடம் இலங்கைத் தீவு என்பதும் ஆனால் அங்கு ஏற்கனவே வாழந்து வருகின்ற இயக்கர்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்றும் புத்தர் எண்ணுகின்றார்.

மகாவம்சத்தின் முதல் அத்தியாயம் இலங்கைத் தீவுக்கு புத்தர் (ததாகதர்) மும்முறை வந்ததாக மகாவம்சத்தின் முதலாவது அத்தியாயம் குறிப்பிடுகிறது. புத்தர் முதல்முறை வந்தபோது இலங்கைத்தீவு எங்கணும் வாழ்கின்ற இயக்கர்கள் குறிப்பிட்ட ஒரு தினத்தில் மகாவலி கங்கை அருகே வந்து கூடுவது வழக்கம். அந்த வேளையில் புத்தர் அங்கே வான்வழியாகப் பறந்து வந்து பயங்கரமான சூறைக்காற்றை உருவாக்கி இயக்கர்களைப் பயமுறுத்துகின்றார். உடனே இயக்கர்கள் இந்த இலங்கைத்தீவு முழுவதையுமே உமக்குத் தருகின்றோம். எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்ச புத்தர் அவர்களை மலைநாட்டுக்கு அனுப்பி வைக்கின்றார். அதன் பின் தேவர்கள் வந்து கூடினர். அப்போது அந்த சபையில் அவர் தம் சமயக் கொள்கையைப் போதித்தார். பல கோடி மக்கள் பவுத்த மதத்துக்கு மாறினர்.

புத்தர் இரண்டாம் முறை இரண்டு நாக மன்னர்கள் தமக்குள்ளே போர் புரிவதைத் தடுப்பதற்காக வருகின்றார். முன்பு சூறைக்காற்றை உருவாக்கி ஆதிக்குடிகளைப் பயமுறுத்தி அடிபணிய வைத்த புத்தர் இம்முறை பயங்கர இருளைப் பரவச்செய்து நாக மன்னர்களையும் அவரது வீரர்களையும் பயப்பீதி கொள்ள வைக்கின்றார். பின்னர் அங்கு வாழ்ந்த எட்டுக்கோடி நாகர்களுக்கு ‘புத்தம் - தர்மம் - சங்கம்’ என்ற போதனைகளை அருளுகின்றார்.

இது நடைபெற்று மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் புத்தர் மீண்டும் இலங்கைக்கு மூன்றாவது முறை வருகை செய்கின்றார். கல்யாணி (களனி) என்ற நாட்டின் நாக மன்னன் மகோதரனது வேண்டுதலை ஏற்று அங்கு சென்று அந்த இடங்களை அருள்வாழ்த்தித் திரும்புகின்றார்.

இயக்கர்களை அகற்றியது போல் புத்தரால் நாகர்களை அகற்ற முடியவில்லை. நாக வழிபாடும் நாக என்ற சொல்லை அடையாகக் கொண்டு ஆண்ட மன்னர்கள் பெயர்களும் இலங்கையின் வட புலம் நாகதீபம் என அழைக்கப்பட்டதும் தென்மேற்கு கல்யாணி (இன்றைய களனி) என அழைக்கப்பட்டதும் இலங்கைத் தீவின் பழைய வரலாற்று உண்மைகளை மகாவம்சம் குறிப்பிடுகிறது.

கோரநாகன், மகாநாகன், குஜநாகன், ஸ்ரீநாகன், குஞ்சநாகன், இளநாகன் எனப் பல அரசர்கள் நாக பின் ஒட்டோடு இலங்கையை 8 ஆம் நூற்றாண்டு வரை ஆண்டுள்ளார்கள். தீசன் என்ற சொல்லும் நாக வம்சத்தவருக்கு உரிய சொல்லே.

துட்ட கைமுனு - எல்லாளன் போர் சிங்கள - தமிழ் அரசனுக்கு இடையிலான போரல்ல. அப்படி இப்போது சித்தரிக்கப்படுகிறது. அப்போது சிங்களவர் என்ற இனம் உருவாகவில்லை.

பவுத்த நாக வம்ச அரசனுக்கும் இந்து எல்லாள மன்னனுக்கும் இடையில் நடந்த போர். இரண்டு அரசர்களது படைகளிலும் பவுத்த தமிழர்களும் இந்து நாகர்களும் இருந்திருக்கிறார்கள். (வளரும்)

# சாத்தான்குளம் வழக்கில் கைதான சிறப்பு உதவி ஆய்வாளர், காவலர் மருத்துவமனையில் அனுமதி: 3 காவலர்கள் மதுரை மத்திய சிறையில் அடைப்பு

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் போலீஸார் தாக்கியதில் தந்தை, மகன் மரணமடைந்த வழக்கு தொடர்பாக சிபிசிஐடி போலீஸாரால் கைது செய்யப்பட்ட மேலும் 5 பேரில் 3 காவலர்கள் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் ஒரு காவலர் உடல்நலக்குறைவு காரணமாக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.5 பேர் கைது சாத்தான்குளத்தைச் சேர்ந்த வியாபாரி களான ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் போலீஸார் தாக்கியதில் உயிரிழந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவின் பேரில், சிபிசிஜடி போலீஸார் கொலை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கு தொடர்பாக சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன், தலைமைக் காவலர் முருகன், காவலர் முத்துராஜ் ஆகிய 5 பேரையும் சிபிசிஜடி போலீஸார் ஏற்கெனவே கைது செய்து மதுரை மத்திய சிறையில் அடைத்துள்ளனர்.




இந்நிலையில், சம்பவம் நடந்த ஜூன் 19ம் தேதி இரவு மற்றும் 20ம் தேதி பகலில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை உள்ளிட்ட மேலும் 14 காவலர்களை சிபிஜடி போலீஸார் நேற்று அதிகாலை தூத்துக்குடி சிபிசிஜடி அலுவலகத்துக்கு அழைத்து வந்தனர். அவர்களிடம் சிபிசிஜடி ஜஜி சங்கர், எஸ்.பி.க்கள் விஜயகுமார், மாடசாமி உள்ளிட்ட அதிகாரிகள் பகல் முழுவதும் தீவிர விசாரணை நடத்தினர்.இந்த விசாரணை முடிவில் சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை, காவலர் கள் செல்லத்துரை, சாமத்துரை, வெயிலுமுத்து, தாமஸ் பிரான்சிஸ் ஆகிய 5 பேரையும் நேற்று இரவு 9.30 மணியளவில் சிபிசிஜடி போலீஸார் அதிரடியாகக் கைது செய்தனர். இவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 302, 201, 342, 107 ஆகிய 4 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

பின்னர் 5 பேரும் இரவு 10 மணியளவில் மருத்துவப் பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டனர். அப்போது சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை 'எனக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அதிகாரிகள் மற்றும் பத்திரிகையாளர்களால் எனது வாழ்க்கையே பறிபோய்விட்டது' என ஆவேசமாகக் கத்தி வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அங்கு பாதுகாப்புக்கு நின்ற போலீஸார் அவரைச் சமாதானம் செய்து அழைத்துச் சென்றனர். காவலர்கள் செல்லத்துரை, சாமத்துரை, வெயிலுமுத்து ஆகிய மூவரும் மருத்துவப் பரிசோதனை முடிந்து, தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஹேமா முன்னிலையில் அவரது வீட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை ஜூலை 23ம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க நீதித்துறை நடுவர் ஹேமா உத்தரவிட்டார். இதையடுத்து மூவரும் இன்று அதிகாலை 2 மணியளவில் பேரூரணியில் உள்ள மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டனர்.

அதேநேரத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை மற்றும் காவலர் தாமஸ் பிரான்சிஸ் ஆகிய இருவருக்கும் உடல்நிலை பாதிப்பு காரணமாக, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலேயே அனுமதிக்கப்பட்டனர். இருவருக்கும் நெஞ்சுவலி, அதிக ரத்த அழுத்தம், அதிக சர்க்கரை, மயக்கம் போன்றவை இருந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.இதையடுத்து தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஹேமா, அதிகாலை 2.15 மணியளவில் மருத்துவமனைக்கே நேரில் வந்து, அவர்கள் இருவரையும் ஜூலை 23ம் தேதி நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டார். இருவருக்கும் உடல்நிலை சீராகாததைத் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் மருத்துவமனை வளாகத்தில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதற்கிடையே பேரூரணி சிறையில் அடைக்கப்பட்ட காவலர்கள் செல்லத்துரை, சாமத்துரை, வெயிலுமுத்து ஆகிய மூவரும் இன்று காலை 6.15 மணிக்கு மதுரை மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த வழக்கில் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட ஆய்வாளர் ஸ்ரீதர் உள்ளிட்ட 5 பேர் மதுரை சிறையில்தான் அடைக்கப்பட்டுள்ளனர். சாத்தான்குளம் வழக்கு தொடர்பாக சிபிசிஜடி போலீஸார் இதுவரை மொத்தம் 10 பேரைக் கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'கரோனா கொல்லி மைசூர்பா' விற்பனை செய்த கடைக்கு 'சீல்'



கோவையில் 'கரோனா கொல்லி மைசூர்பா' என்ற பெயரில் விற்பனை செய்யப்படுவதாக, கடை முகவரியுடன் சமூக வலைதளங்களில் ஒரு தகவல் பரவியது.இதையடுத்து, உணவுப் பாதுகாப்பு அலுவலர் மற்றும் சித்த மருத்துவக் குழுவினர் தொட்டிபாளையத்தில் செயல்படும் ஒரு ஸ்வீட்ஸ் கடையில் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, எந்த முன் அனுமதியும் பெறாமல், மூலிகை மைசூர்பா, கரோனா கொல்லி மைசூர்பா என்று கூறி 50 கிராம் பாக்கெட் ரூ.50க்கு விற்பனை செய்வது தெரியவந்தது.

இதுதொடர்பாக மாவட்ட உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் தமிழ்ச்செல்வன் கூறும்போது, "கரோனா கொல்லி மைசூர்பாவில் சுக்கு, மிளகு, திப்பிலி, சித்தரத்தை, திரிபலா, மஞ்சள், முருங்கை இலை, அகத்தி இலை, கற்பூரவல்லி இலை ஆகியவை உள்ளடங்கிய 19 மூலிகைகள் உள்ளதாகவும், இந்த மைசூர்பா கரோனாவை ஒரே நாளில் குணப்படுத்தும் என்றும் கூறி விற்பனை செய்துவந்துள்ளார். கடையில் இருந்த 120 கிலோ மைசூர்பா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.


தவறான விளம்பரம் செய்து விற்பனை செய்ததற்காக கடைக்காரர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, உரிமம் ரத்து செய்யப்படுகிறது. கடைக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது" என்றார்.

# கேரளாவில் பரபரப்பைக் கிளப்பிய ஸ்வப்னா சுரேஷ் யார்? 30 கிலோ தங்கம் கடத்தலில் முன்ஜாமீன் தாக்கல்

கேரளாவில் உள்ள ஐக்கிய அரபு அமீரகத் தூதரகம் மூலம் 30 கிலோ தங்கம் கடத்தலில் முக்கிய நபராகத் தேடப்பட்டுவரும் ஸ்வப்னா சுரேஷ் முன் ஜாமீன் கோரி திருவனந்தபுரம் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.திருவனந்தபுரத்தில் உள்ள ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதரகப் பெயரைப் பயன்படுத்தி தங்கம் கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, சுங்கத்துறை அதிகாரிகளுக்குக் கடந்த ஜூன் மாதம் 30ம் தேதி 30 கிலோ தங்கம் வைக்கப்பட்டிருந்த பார்சலைப் பறிமுதல் செய்தனர்.

இதன் சர்வதேச மதிப்பு ரூ.15 கோடி என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் பார்சலை வாங்குவதற்காக வந்திருந்த சரித் குமார் என்பவரை சுங்கத்துறையினர் மற்றும் போலீஸார் கைது செய்தனர். அவரிடம் சுங்கத்துறையினர் விசாரித்தபோது, தூதரகத்தில் ஏற்கெனவே பணியாற்றியவரும், கேரள தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியில் இருப்பவருமான ஸ்வப்னா சுரேஷ் என்பவருக்குத் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இந்தத் தகவலையடுத்து, ஸ்வப்னாவை போலீஸார் கைது செய்யத் தேடி வருகின்றனர். ஆனால், ஸ்வப்னா தலைமறைவாக இருந்து வருகிறார். இந்த விவகாரம் கேரள அரசியலிலும் பெரும் பரபரப்பைக் கிளப்பியுள்ளது.முதல்வர் அலுவலகத்துக்கும் தங்கம் கடத்தலுக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டி வரும் எதிர்க்கட்சிகள், முதல்வர் பினராயி விஜயன் ராஜினாமா செய்து விசாரணையை எதிர்கொள்ள வேண்டும் என்று குரல் கொடுத்து வருகின்றன.இந்நிலையில் திருவனந்தபுரம் உயர் நீதிமன்றத்தில் ஸ்வப்னா சுரேஷ் சார்பில் முன்ஜாமீன் கோரி இன்று மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.அந்த மனுவில் ஸ்வப்னா சுரேஷ் கூறுகையில், "கேரளாவில் ஐக்கிய அரபு அமீரகத் தூதரகத்தின் மூலம் 30 கிலோ தங்கம் கடத்தி விமான நிலையத்தில் பிடிபட்ட வழக்கில் போலீஸார் தேவையின்றி எனது பெயரைச் சேர்த்துள்ளனர்.



ஐக்கிய அரபு அமீரகத் தூதரகத்தின் பொறுப்பு அதிகாரி ராஷித் காமிஸ் அல் ஷாமேலி உத்தரவின் பெயரில்தான் திருவனந்தபுரம் விமான நிலைய சுங்கத்துறை அதிகாரியிடம் அந்த பார்சல் குறித்து விசாரித்தேன்.ஐக்கிய அரபு அமீரகம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் கடந்த 1ம் தேதியிலிருந்து பணியாற்றி வருகிறேன். தூதரகப் பொறுப்பு அதிகாரி அலுவலகத்துக்கு வர வேண்டிய பார்சல் வரத் தாமதமாகியுள்ளதால் அதுகுறித்து விசாரிக்க என்னிடம் கூறியிருந்ததால், நான் விசாரித்தேன்.

யார் இந்த ஸ்வப்னா சுரேஷ்?கேரளா மாநிலத்தில் பரபரப்புக்குள்ளாகி வரும் 30 கிலோ தங்கக் கடத்தலில் முக்கியமாகத் தேடப்பட்டுவருபவர் ஸ்வப்னா சுரேஷ். அபுதாபியில் பிறந்து, படித்து அங்கேயே வளர்ந்தவர் ஸ்வப்னா சுரேஷ். அபுதாபியில் படித்ததால் அரபு மொழியைச் சரளமாகப் பேசக்கூடியவர்.மேலும் பிறப்பில் மலையாளி என்பதால், மலையாளம், இந்தி, ஆங்கிலம் எனப் பல மொழிகளில் மிகவும் சரளமாக உரையாடும் திறமை படைத்தவர்.ஸ்வப்னா சுரேஷ் பூர்வீகம் திருவனந்தபுரம் அருகே இருக்கும் பலராமபுரம். அபுதாபியிலிருந்து வந்தபின் பலராமபுரத்தில் ஒரு டிராவல் ஏஜென்சியில் ஸ்வப்னா பணியில் சேர்ந்தார்.

அதன்பின் மீண்டும் 2016ம் ஆண்டு திருவனந்தபுரம் வந்து அங்குள்ள ஐக்கிய அரபு அமீரகத்தில் ஒப்பந்த அடிப்படையில் செயலாளராகப் பணியில் சேர்ந்தார். சரளமாக அரபு மொழி, மலையாளம், ஆங்கிலம் , இந்தி ஆகியவற்றை ஸ்வப்னா பேசியதால், கேரள அரசு அதிகாரிகள் மட்டத்தில் விரைவில் பழகி நல்ல நட்புறவை ஸ்வப்னா ஏற்படுத்திக்கொண்டார். ஆனால், கடந்த 6 மாதங்களுக்கு முன் ஸ்வப்னா சுரேஷ் மீது முறைகேடு புகார் வந்ததையடுத்து, ஐக்கிய அரபு அமீரகப் பணியிலிருந்து விலகினார். ஆனால், இவர் விலகவில்லை, நீக்கப்பட்டார் என்ற தகவலும் கூறப்படுகிறது.

அதன்பின் தனக்கிருந்த அரசியல் செல்வாக்கில், கேரள அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையில் வர்த்தக மேம்பாட்டு மேலாளராக ஒப்பந்த அடிப்படையில் ஸவப்னா பணியில் சேர்ந்தார். தகவல் தொழில்நுட்பத் துறை செயலரும் கேரள முதல்வரின் தனிச் செயலாளருமான சிவசங்கரனுக்கு கீழ் பணியாற்றிய ஸ்வப்னா குறுகிய நாளிலேயே அவருடன் நெருக்கமானார்.ஸ்வப்னா சுரேஷின் வீட்டுக்கு சிவசங்கரன் வந்து செல்லும் அளவுக்கு அவருடன் நெருக்கமாக மாறினார் என்று கேரள ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஸ்வப்னா சுரேஷுக்குத் திருமணமாகி கணவரும் இரு குழந்தைகளும் உள்ளனர்.

சமீபத்தில் ஐக்கிய அரபு அமீரகத் தூதரகம் மூலம் தங்கம் கடத்தப்பட்டு பிடிபட்டபோது, அதில் முக்கிய நபராகவும், தேடப்படுவராகவும் ஸ்வப்னா சுரேஷ் மாறியுள்ளார்.கேரள ஐ.டி.பிரிவின் வர்த்தக மேலாளராக இருந்துவரும் ஸ்வப்னா சுரேஷ், அந்தத் துறையின் செயலாளர் சிவசங்கரனுக்கு நெருக்கமானவர் என்பதால், தகவல் தொழில்நுட்பச் செயலாளராக இருக்கும் சிவசங்கரனிடம் அந்தப் பதவியை கேரள அரசு பறித்தது.மேலும், கேரள முதல்வர் பினராயி விஜயனின் தனிச்செயலாளராகவும் கூடுதலாகப் பதவி வகித்து வந்தார் சிவசங்கரன். அந்தப் பதவியும் பறிக்கப்பட்டது.




# அன்பின் தொனி - 567

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

### கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியா னமாயிருக்கிற மனு'ன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். துன்மார்க்கரோ அப்படி யிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள். ஆகையால் துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை. கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார், துன்மார்க்கரின் வழியோ அழியும். **- சங்கீதம் 1: 1-6**

### பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள்

ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷே கம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி: அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள். பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார், ஆண்டவர் அவர்களை இகழுவார். அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார். நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபி'ேகம்பண்ணி வைத்தேன் என்றார். தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன், கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன், என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன், இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் என்று சொன்னார். இப்போதும் ராஜாக்களே, உணர் வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள். பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள். குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள், கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும், அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.
**- சங்கீதம் 2: 1-12**

### நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்

கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்! எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர். தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று, என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக் கிறார்கள். ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர். அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார். நான் படுத்து நித்திரை செய்தேன், விழித்துக் கொண்டேன், கர்த்தர் என்னைத் தாங்குகிறார். எனக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம் பேருக்கும் நான் பயப்படேன். கர்த்தாவே, எழுந்தருளும், என் தேவனே, என்னை இரட்சியும். நீர் என் பகைஞர் எல்லா ரையும் தாடையிலே அடித்து, துன்மார்க்கருடைய பற்களைத் தகர்த்துப் போட்டீர். இரட்சிப்பு கர்த்தருடையது, தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக. **- சங்கீதம் 3: 1-8**

### பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள்

என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும், நெருக்கத்தில் இருந்த எனக்கு விசால முண்டாக் கினீர், எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும். மனுபுத்திரரே, எதுவரைக்கும் என் மகிமையை அவமானப் படுத்தி, வீணானதை விரும்பி, பொய்யை நாடுவீர்கள். பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள், நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார். நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிரு ங்கள், உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள். எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார் என்று சொல்லுகிறவர்கள் அநேகர், கர்த் தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும். அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிறகாலத்தின் சந்தோஷத்தைப்பார்க்கிலும், அதிக சந்தோ'த்தை என் இருதயத்தில் தந்தீர். சமாதானத் தோடே படுத்துக்கொண்டு நித்திரைசெய்வேன், கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர். **- சங்கீ 4: 1-8**

### நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல

கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும், என் தியானத்தைக் கவனியும். நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன், என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும். கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர், காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன். நீர் துன்மார்க்கத்தில் பிரியப் படுகிற தேவன் அல்ல, தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை. வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்க மாட்டார்கள், அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர். பொய் பேசுகிறவர்களை அழிப்பீர், இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் கர்த்தர் அருவருக்கிறார். நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து. உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்து கொள்ளுவேன். கர்த்தாவே, என் சத்துருக்களினிமித்தம் என்னை உம்முடைய நீதியிலே நடத்தி, எனக்குமுன்பாக உம்முடைய வழியைச் செவ்வைப்படுத்தும். அவர்கள் வாயில் உண்மை இல்லை, அவர்கள் உள்ளம் கேடுபாடுள்ளது, அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவி னால் இச்சகம் பேசுகிறார்கள். தேவனே, அவர்களைக் குற்றவாளிகளாகத் தீரும், அவர்கள் தங்கள் ஆலோசனைகளா லேயே விழும்படி செய்யும், அவர்கள் துரோகங்களினுடைய திரட்சியினிமித்தம் அவர்களைத் தள்ளிவிடும், உமக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்களே. உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோ'ித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக, நீர் அவர்களைக் காப்பாற்றுவீர், உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக. கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்ளுவீர். **- சங்கீதம் 5: 1-12**

*தொடரும்...*

# 31ம் நாள்நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

அன்னை மடியில் 03-03-1942 ஆண்டவன் அடியில் 12-06-2020



யாழ் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி நுணாவில், வவுனியா கரப்பன்காடு மற்றும் கனடா மொன்றியல் ஆகிய இடங்களில் வசித்தவருமாகிய திருமதி. மகேஸ்வரி சபாபதி அவர்களின் 31ம் நாள் நினைவு அஞ்சலி.

எமது தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் மற்றும் தொலைத்தொடர்பு, முகநூல் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதி நிகழ்வின் போது கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், சகல வழிகளிலும் உதவியோருக்கும் இன்னும் பல வழிகளில் உதவியும், ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருறும்**

கணவர், மக்கள், மருமக்கள், சகோதரி, மைத்துனர்கள், மைத்துனிமார்கள், பெறாமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்

## திருமதி. மகேஸ்வரி சபாபதி (நாரந்தனை)

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:
சபாபதி (கணவர்) 1 514 - 7357316
சிவபரன் (மகன்) 1 514 - 7094094
வாணி (மகள்) 1 514 - 5596576
உமேஸ் (மருமகன்) 1 514 - 575 6576


# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



இவ்விடத்தில் விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
PARK PLAZA
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1266 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 10, 2020

# ஸ்காபுறோவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தீபா சீவரட்ணம் கொலை தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்

ஸ்காபுறோவில் கடந்த மார்ச் மாதம் 13ம் திகதி தனது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தீபா சீவரட்ணம் என்னும் திருமணமான பெண்ணின் கொலை தொடர்பாக தீவிர விசாணைகளை மேற்கொண்ட ரொரன்ரோ பொலிசார் கொலையோடு சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் மூன்று பேரைக் கைது செய்துள்ளனர் என அறியப்பட்டுள்ளது.

இந்த கைதுகள் தொடர்பாக பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், தீபா சீவரட்ணம் கொலை செய்யப்பட்ட தினத்தன்று அவரோடு வீட்டில் தங்கியிருந்த மற்றொரு பெண்ணும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் உயிராபத்து இன்றி விடுவிக்கப்பட்டதாகவும்,

தொடர்ந்து தாங்கள் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் மார்ச் மாதம் 30ம் திகதி ரொரன்ரோ நகரில் வாழும் ஸ்டீட்லி கேர் என்பரைக் கைது அவர் மீது கொ-லை மற்றும் கொலை முயற்சி ஆகிய மோசமான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.



எதிர்வரும் 23ம் திகதி இவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் வகையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் நேற்று ஓசாவா நகரைச் சேர்ந்த ஹரி சாமுவேல் என்பவரையும் ரொரன்ரோவைச் சேர்ந்த விஜேந்திரன் பாலசுப்பிரமணியம் என்பவரையும் கொலை தொடர்பாக கைது செய்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இந்தக் கொலை தொடர்பாக எமது ஆசிரிய பீடத்திற்கு கிடைத்த தகவல்களில் கொலைச் சம்பவம் நடைபெற்ற அன்று ஒரு பார்சல் விநியோகிக்கும் நிறுவனம் சார்பில் அங்கு வந்துள்ளதாகக் கூறி கொல்லப்பட்டவரின் பெயரைச் சொல்லி அவரிடம் அதை ஒப்படைக்க வேண்டும் என்று கொலையாளி கூறியதாகவும், ஆனால் முதலில் வந்த தாய் தன்னிடம் அதை ஒப்படைக்கும் படி கேட்டும், கொலையாளி பார்சலில் பெயர் உள்ளவரே நேரடியாக வரவேண்டும் என்று கட்டாயப்படுத்தி தெரிவித்ததாகவும் அதனால் மரணமடைந்த பெண் தீபா வெளியே வந்ததனால் அவர் உயிர் துறக்க நேர்ந்ததாகவும் கூறப்பட்டது.

கைது செய்யப்பட்ட மூவரும் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# நவாலி சென் பீற்றர் தேவாலயத்தில் தடைகளை மீறி சிவாஜிலிங்கம்தலைமையில் நேற்று அஞ்சலி!

குறித்த தூபியில் அஞ்சலி செலுத்துவதற்காக பொலிசார் தடை ஏற்படுத்தி இருந்தனர்.
பின்னர் அருட்தந்தையர்கள் மட்டும் சுடரேற்றி அஞ்சலி செலுத்த பொலிசார் அனுமதித்தனர். அதனை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்த பொலிசார் அனுமதிவில்லை.

அந்நிலையில் இன்றைய அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பொலிசாரின் தடை-களை மீறி சுடரேற்ற முற்பட்ட போது பொலிஸ் அதிகாரியொருவர் அவரை இழுத்து விழுத்த முற்பட்டார். இருந்த போதிலும் அதனையும் மீறி சிவாஜிலிங்கம் நினைவு தூபியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.



அதனை தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தே-சிய அமைப்பாளர் வி.மணிவண்ணனும் சுடரேற்றினார். அதனை தொடர்ந்து பொலிசாரின் தடைகளை மீறி பொதுமக்கள் நினைவு தூபியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதன் போது பொலிசார் கொரோனோ தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நீங்கள் ஒன்று கூடியதற்காக உங்கள் அனைவரையும் கைது செய்து தனிமைப்படுத்தும் அதிகாரம் எமக்கு உண்டு என பொலிசார் அச்சுறுத்தினர்.

அதனை தொடர்ந்து அருட் தந்தையர்கள் மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தி விட்டு , சென்று விடுவார்கள். அவர்களை அஞ்சலி செலுத்த அனுமதிக்குமாறு பொலிசாரை கேட்டதற்கு இணங்க சமூக இடைவெளிகளை பேணி அஞ்சலி செலுத்துமாறு அறிவுறுத்தி அஞ்சலி செலுத்த அனுமதித்தனர்.

அதேவேளை பொலிசாரின் தடைகளை மீறி மக்களை சுடரேற்றி அஞ்சலி செலுத்திக்கொண்டு இருந்த வேளை அவ்விடத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து அவ்விடத்திற்கு துப்பாக்கிகளுடன் பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் விரைந்து பொதுமக்கள் மத்தியில் அவர்களை அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டனர்.

இன்றைய நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை விதிக்க வேண்டும் என மானிப்பாய் பொலிசார் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தடையுத்தரவு கோரிக்கையை முன் வைத்த போதிலும் நீதிமன்றம் அதற்கு தடை விதிக்க மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சமூக ஆர்வலராகவும் தொழிலதிபரா-கவும் நன்கு அறியப்பெற்ற பவதாரணி ராஜசிங்கம் அவர்கள், யாழ் என்னும் தாய் மண்ணில் தேர்தலில் களமிறங்கி தனது மக்களுக்கு சேவையாற்ற வந்துள்ளார்.




Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LiFe Financial Services Inc.

RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early

Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074